பக்கங்கள்: 21

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை 20.11.2022 கதிர் 15

**இது ரகசியம் அல்ல!**

இந்தியாவுடனான போக்குவரத்து வாசலை வடக்கில் யாழ்ப்பாணத்தை ஒட்டி பலாலியிலோ அல்லது காங்கேசனிலோ வைத்திருப்பதில் கொழும்புக்கு அடியோடு விருப்பம் இல்லை என்பது இப்போது வெளியாகும் செய்திகள் மூலம் ☞2

# ஒரு தாய் மக்களாக, ஓர் அணியில் ஒன்று சேர்ந்து 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவோம்!

## வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவிப்பு

75 ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடுகின்ற போது ஒரு தாய் மக்களாக ஒரே அணியாக சேர முடியும் என நம்புகின்றேன்: வவுனியாவில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

75 ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடுகின்ற போது ஒரு தாய் மக்களாக, ஒரே அணியாக சேர முடியும் என நம்புகின்றேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர் ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்திக்கான விசேட அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்திக்கான அலுவலகத்தை திறந்து வைத்துள்ளேன். இந்த அலுவலகத்தின் ஊடாக வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச முடியும். நாடாளுமன்ற உறுப்பினர் ☞2



## தமிழ்க் கட்சிகளின் கூட்டம் 24ஆம் திகதி வியாழனன்று

தமிழர்களின் அபிலாஷை சமஷ்டி முறையிலான தீர்வுதான் என்பதை தமிழ் தேசிய கட்சிகள் ஒரே குரலில் வலியுறுத்துவதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அழைத்துள்ள கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கொழும்பில் சம்பந்தனின் வீட்டில் நடைபெறும் எனத் தெரிகின்றது. ☞2

## ஜனாதிபதியின் வடக்கு மாகாண உப அலுவலகம் திறந்து வைப்பு




ஜனாதிபதி அலுவலகத்தின் வடக்கு மாகாண அபிவிருத்தி விசேட பிரிவு உப அலுவலகம் வவுனியாவில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, வைரவபுளியங்குளம், ரயில்நிலைய ☞2

### இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்

# அஜித் டோவல் இலங்கையில்?

### மோடியின் செய்தியுடன் வந்தார்



**கொழும்பு,நவம்பர் 20**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இரண்டு நாள் விஜயமாக கொழும்புக்கு நேற்று சத்தம் சந்தடியின்றி வந்து சேர்ந்திருக்கிறார் என செய்தி வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டன.** ☞2

## தீர்வுக்கு உறுதுணையாக இருப்போம்! ரணிலிடம் சுமந்திரன் உறுதி தெரிவிப்பு



(கி.வசந்தரூபன்)

நீண்டகால பிரச்சினையை தீர்க்க நாம் உறுதுணையாக இருப்போம் என ஜனாதிபதி முன்னிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்தி விசேட பிரிவு அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி அவர்கள் ☞2

## வடக்கு காணிப் பிரச்சினை; விரைவில் தீர்வு கிடைக்கும்


வவுனியாவில் ஜனாதிபதி உறுதி

காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாகாண மட்டத்தில் 8 குழுக்களை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதன்படி வடக்கு மற்றும் தெற்கில் நிலவும் காணிப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார். ☞20

## கூரைக் கொங்கிறீட் இடிந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழப்பு!



### பளையில் ஆலயத்தில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.20

கிளிநொச்சி மாவட்டம் பளைப் பகுதியில் ஆலயத்திற்கான கூரைக்கு கொங்கிறீட் இட்ட சமயம் கூரை இடிந்து வீழ்ந்தமையினால் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் ☞20

## வன ஆக்கிரமிப்புத்தான் முல்லையில் பிரச்சினை!

### ரணிலுக்கு நேற்று நேரில் சுட்டிக்காட்டு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு வரை மாவட்டத்தின் 36.7 வீதமே வனப்பகுதியென அறிவிக்கப்பட்ட போதும்தற்போது 75வீதம்எனப்படுவதே அந்த மாவட்டத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கும் தடையாக இருப்பதாக மாவட்ட நிர்வாகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ☞20

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாகி வருகிறது.

நல்லாட்சி அரசில் பலாலி விமான நிலையத்தை இந்தியாவுடனான போக்கு வரத்துக்குரிய சர்வதேச விமான நிலைய மாகத் திறப்பதற்கு முன்னின்றவர் அப் போது பிரதமராக இருந்த ரணில் விக்கி ரமசிங்க.

இப்போது அவர் ஜனாதிபதியாகி நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் பலாலி விமான நிலையத்தை சர்வதேசப் போக்குவரத்துக்கு மீண்டும் திறக்கும் விடயம் 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை, நாளை என்று தள்ளிப் போகின் றதே தவிர திறக்கப்படுவதாக இல்லை.

ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி காலம் இழுத்தடிக்கப்படுகின்றது.

அதே கதிதான் காங்கேசன்துறை துறைமுகத்தைத்திறப்பதற்கான ஏற்பாட்டி லும் கூட. அதனால் காரைக்காலுக்கான படகுப் பாதைப் போக்குவரத்து கிடப்பில் என்றாகிவிட்டது.

பலாலி தொடர்பில் தமது கருத்து நிலைப்பாடு என்ன என்பதை நேற்று வவு னியாவில் வைத்து தமிழ் பிரமுகர் ஒரு வருக்கு நேரில் உடைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில்.

“நீங்கள் பலாலி விமான நிலைய அபி விருத்தி, விஸ்தரிப்பு என்றால் காணி ஆக் கிரமிப்பு என்று ஆர்ப்பாட்டம் பண்ணு கிறீர்கள். அது மிகவும் உணர்வுபூர்வ மான விவகாரமாக உள்ளது. அதிலும் விட வவுனியா விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றி, விஸ்தரித்துத் திறக்கலாம். விமான நிலைய விஸ்தரிப்புக்குப் போதிய நிலம் உண்டு. பிரச்சனைகள் இல்லை. கிளி நொச்சி, மன்னார் முலலைத்தீவு, திரு கோணமலை, அநுராதபுரம், பொலன் நறுவை மாவட்டங்களுக்கு நடுவில் அது உள்ளமையால் அந்த எல்லா மாவட்ட மக்களுக்கும் நெருக்கமானது. வடக்கின் மேல் மூலையில் பலாலி என்பது பிற மாவட்டங்களுக்குத் தூரமானது. எனவே வவுனியாவை சர்வதேச விமான நிலை யமாக மாற்றுவதுதான் பொருத்தமா னது” - என்ற சாரப்பட ஒரு குட்டி லெக்சர் அடித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதன்படி 'பலாலி அவுட்; வவுனியா இன்!' என்று தோன்றுகின்றது.

சிங்களமயமாகும் வவுனியாவில் தான் சர்வதேச விமான நிலையம் - அது வும் இந்தியாவுக்கு வாசலான விமான நிலையம் - வைத்திருப்பது பொருத்தமா னது என பேரினவாத மேலாதிக்கம் சிந் திக்கின்றது, அவ்வளவுதான். இதன் பின் னால் புதைந்து கிடக்கும் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ள கொள்வது அப்படி ஒன் றும் கஷ்டமானது அல்ல.

அடுத்தது காங்கேசன் துறைமுக விவ காரம்.

கடந்த வாரம் மன்னார் ஆயர் கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்தார்.

அதன் பின்னர் தமது மன்னார் விசிட் டில் தலைமன்னார் இறங்குதுறை அல் லது பியரைப் பார்வையிடுவதை நிகழ்ச் சித்திட்டத்தில்ஒன்றாக்கிக்கொண்டுள்ளார் ஜனாதிபதி ரணில்.

தலைமன்னார் - இராமேஸ்வரம் போக்குவரத்து, குறிப்பாகப் பயணிகள் போக்குவரத்துப் பற்றி அதிகம் இப்போது பேசத் தலைப்பட்டுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இன்றைய மன் னார் விஜயத்தில் அது குறித்து ரணில் அதி கம் சிரத்தை காட்டுவார் எனத் தெரிகிறது.

ஆக, இந்தியாவுடனான போக்குவரத் துக்கான வாசலாகப் பலாலியோ அல்லது காங்கேசன்துறையையோ திறந்து, யாழ் குடாநாட்டைசர்வதேசஊடாட்டத்துக்கான Hub ஆக மாற்ற கொழும்பு அனுமதிக் காது என்பதுதான் இப்போதைய போக்கு களின் பின்னால் புதைந்து கிடக்கும் பேரி னவாதத்தின் சூழ்ச்சித் திட்டம். ஆக மொத் தத்தில், 'ஈழத் தமிழருக்கும் பெப்பே; புது டில்லிக்கும் பெப்பே' என்பதுதான் கொழும்பின் தந்திரம்.

***

டிசெம்பர் எட்டாம் திகதி வரவு - செல வுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு. அது முடிந்து அடுத்த நாள் 9ஆம் திகதி புதிய அமைச்சரவை - மறுசீரமைக்கப்பட்ட மந்திரி சபை - பதவி ஏற்கும் என்று விட யமறிந்த ஊடக நண்பர் ஒருவர் அடித்துக் கூறுகின்றார்.

அமைச்சரவை மாற்றமும் 'பிள்ளை யார் கல்யாணம் மாதிரி' எப்போதும் தள் ளிக்கொண்டுதான் போகிறது. கடைசியில் எபோது நடக்கும் என்று பார்ப்போமே…!

**- மின்னல் -**

## ஒரு தாய் மக்களாக, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காதர் மஸ்தான், அனைத்தும் யாழ்ப் பாண மாவட்டத்திற்குச் செல்வதாக கூறி யதையடுத்து இந்த அலுவலகத்தை நான் வவுனியாவில் திறந்து வைத்துள்ளேன்.

வடக்கு மக்களுக்கும் ஜனாதிபதி அலு வலகம் ஊடாக தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இதற்காகவே இந்தஅலுவலகத்தற்போதுவவுனியாவில் ஸ்தாபிக்கப்படுகிறது. ஜனாதிபதி செயல கத்தின்மேலதிகசெயலாளர்இளங்கோவன் ஊடாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப் படும். இங்கிருந்து அவர் பணியாற்ற இருக்கின்றார். இன்னும் ஓர் அதிகாரியை நியமனம் செய்து அவர் மேலதிக செயலா ளராக ஜனாதிபதி செயலகத்தில் இருந்து இந்த பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.

பிரச்சினைகள் குறித்து பேசிக் கொண்டு மட்டும் இருக்காமல் அந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து இங்கு வந்து தீர்வு காணுமாறு அழைக்கின் றேன். இந்த அதிகாரிகள் மட்டுமன்றி அமைச்சு மட்டத்திலான அதிகாரிகளை யும் அழைத்து வந்து மக்களது பிரச்சனை களுக்கு தீர்வு காணப்படும். இந்த அலுவ லகத்திற்கு இன்னுமொரு மிக முக்கிய பணியும் பொறுப்பும் இருக்கிறது. நாட்டில் உள்ள அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து செயற்படும் பணி இந்த அலுவலகத்தின் ஊடாக முன்னெ டுக்கப்படும்.

தீவிரவாதத்தாலும், போராலும் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பிரிவினையை களைய வேண்டும். வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். போரினால், பயங்கரவாதத்தினால் இந்த நாட்டின் இறையாண்மைக்கும் ஏற்பட்டுள்ள பிரச் சினை தொடர்பில் தெற்கு மக்களுக்கும் சந்தேகம் இருக்கிறது. அதனையும் தீர்க்க வேண்டும். முஸ்லிம் மக்களுக்கு தம க்கான உரிமைகள் குறித்து அவர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள். மலையக மக்களும் தமது பிரச்சினைகள் குறித்துத் தீர்வு காண முயற்சிக்கிறார்கள். அவர்க ளும் தம்மை தேசிய இனமாக இணைப் பது குறித்து பேசி வருகிறார்கள். இவை குறித்தும் தீர்வு காண வேண்டும்.

இதனால் மக்களுக்கு இடையில் இருந்த இடைவெளிதற்போது குறைந்துள் ளது. அதனால் தீர்வு காண வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இது கிர மமாக முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளேன். முஸ்லிம் ம க்களின் பிரதிநிதிகளுடனும், சிங்கள மக் களின் பிரதிநிதிகள் மற்றும் சிங்கள மக் களுடனும் பேச வேண்டியுள்ளது.

இங்கு ஒரு முக்கிய விடயம் உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது நாட்டை பிளவுபடுத்தாமல் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண் டும். அதனால் அந்த மக்களின் சந்தேகங் களை தீர்க்க வேண்டியுள்ளது. நாம் ஒன்றிணைந்து பணியாற்றும் போது அந்தப் பிரச்சினைகளுக்கும், சந்தேகங்க ளுக்கும் தீர்வு காண முடியும். போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களும் ஏனைய மக்களைப் போல் சமமான உரிமையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். 1983 ஆம் ஆண்டில் இருந்து மிக நீண்ட பயணம் மேற்கொண்டுள் ளோம். 2009 ஆம் ஆண்டில் இருந்தும் பயணித்திருக்கின்றோம். எனவே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண் டும்.

இங்கு என்ன பிரச்சனை? சிலர் வடக் குப் பிரச்சினை என்கிறனர். சிலர் தமிழ ரின் பிரச்சினை என்கின்றனர். சிலர் இனப் பிரச்சினை என்கின்றனர். பல வாறு கூறுகிறார்கள். இவை அனைத்துக் கும் நாம் பொதுவாக எந்த சொற்பதத்தை பயன்படுத்த வேண்டும் என யோசிக் கின்றேன். தேசிய கீதத்தில் ஒரு வசனமே இருக்கிறது. 75 ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடுகின்ற போது ஒரு தாய் மக்களாக, ஒரே அணியாக சேர முடியும் என நம்புகின்றேன். அதனை செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் நம்புகின் றேன் எனத் தெரிவித்தார்.

### எம்.ஏ.சுமந்திரன்

இங்கு உரையாற்றிய தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன்,

ஜனாதிபதி, பிரதமராக இருந்த போது வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக செயற்பட் டுள்ளார். 2015ஆம் ஆண்டு நீங்கள் பிரதமராக இருந்தபோது வடக்கு மக்க ளின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கு வதற்காக செயற்பட்டீர்கள். எனினும், அப் போது இடம்பெற்ற ஒரு சில குறைபாடுகள் காரணமாக எங்களால் அதனைப் பெற முடியவில்லை. இன்று நீங்கள் ஜனாதி பதியாகிவிட்டீர்கள். எனவே, வடக்கு மக் களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. உங்களது வேலைத்திட்டங்க ளுக்கு எமது ஆதரவை வழங்கும் அதே நேரம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார் .

### செல்வம் அடைக்கலநாதன்

இங்கு உரையாற்றிய தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன்,

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு குறித்து மிகவும் மகிழ்ச்சி. வடக்கின் அபி விருத்தி தொடர்பில் இவ்வாறான தொரு அலுவலகத்தை ஸ்தாபித்தமைக்காக ஜனாதிபதிக்கு நான் நன்றியைத் தெரிவித் துக்கொள்கின்றேன். அதேபோன்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் விரை வில் தீர்க்கப்படும் என்றும் நாம் நம்புகின் றோம் - என்றார்.

### டக்ளஸ் தேவானந்தா

இங்கு உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

2015ஆம்ஆண்டுவடக்குமக்களுக்கு தீர்வுகள் வழங்கப்படும் என நாடாளும ன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். எனினும் ஏதோவொரு காரணத்தால் வடக்கு மக்களுக்கு தீர்வு கிடைக்க வில்லை. இப்போது, போனது போகட்டும். நாம் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்போம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த வகையில் நெகிழ்வாக இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. எவ் வாறாயினும் நாம் இவ்வாறு ஒன்றி ணைந்து செயற்பட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும்நாட்டின் பிரச்சினை களுக்கும்தீர்வுகளை வழங்கக்கூடியதாக இருக்கும் - என்றார்.

நகர அபிவிருத்தி வீடமைப்பு இரா ஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப் பினர் குலசிங்கம் திலீபன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதி யின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வவு னியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்திர உள்ளிட்ட ஏனைய அரச அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அஜித் டோவல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்தியத் தூதரகமோ, கொழும்பு அரசு வட்டாரங்களோ இந்தத் தகவலை ஊர்ஜிதப்படுத்தவில்லை.

இந்தியப் பிரதமர் மோடியின் விசேட செய்தியுடன் தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் அஜித் டோவல் கொழும்பு வந்திருக்கி றார் எனக் கூறப்பட்டது.

கொழும்பிலிருந்து முன்னாள் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து டோவலுடன் தொலைபேசி உரையாட லில் இருந்தார் என்றும் -

ரணிலின் அரசுக்காகப் பரிந்து பல விடயங்களை கோட்டாபய இந்தியத் தேசி யப் பாதுகாப்பு ஆலோசகருடன் பேசி வந் தார் என்றும் -

கடந்த வாரத்தில் இரண்டு நாள் பய ணமாக சத்தம் சந்தடியின்றி கொழும்பு வந்து திரும்பிய டோவலின் மகன் ஷார்யா டோவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் சந் தித்துப் பேசினார் என்றும் -

அதன் தொடர்ச்சியாகவே டோவல் தற்போது கொழும்பு வந்துள்ளார் என்றும் - கூறப்பட்டது.

அவர் இன்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் இந்திய பிரதமரை அவர் நேரடியாகச் சந்திப்பதற்கான இணக்க ஒழுங்கு ஒன்று இன்னமும் எட்டப்பட வில்லை என்ற பின்புலத்தில் டோவலின் வருகை முக்கியமானதாகக் கவனிக்கப் படுவதாக அந்த செய்தி வட்டாரங்கள் தக வல் வெளியிட்டன.

## தமிழ்க் கட்சிகளின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் ஒழுங்குபடுத்தப்பட்டு நடை பெறாமல் போன இந்த கூட்டத்தை புதிய திகதியில் ஒழுங்கு செய்யும் பொறுப்பு தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் ஒப்படைக்கப்பட்டி ருந்தது.

அவர் 24 ஆம் திகதி இக்கூட்டத்தை நடத்தும்ஒழுங்கு குறித்து கூட்டமைப்பின் பங்காளி கட்சி தலைவர்கள் மற்றும் சுமந் திரன், சம்பந்தன், நீதியரசர் சி.வி.விக் னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என அறிய வந்தது.

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துக்கு இக்கூட்டம் பற்றிய தகவலை அறிவிக்கும் பொறுப்பு எம்.ஏ.சுமந்திரனி டம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வந்தது.

## ஜனாதிபதியின் வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் இந்த அலுவலகம் திறந்து வைக் கப்பட்டது. அலுவலகத்தில் ஜனாதிபதி யின்மேலதிக செயலாளர் எஸ்.இளங்கோ வன் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய நிகழ்வின் போது, வவு னியா ஓமந்தை அரச வீட்டுத்திட்ட பயனா ளிகள் 32 பேருக்கு காணி உறுதிப்பத்திரங் கள் வழங்கி வைக்கப்பட்டன. போரால் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு இழப்பீடுகளும், 10 விவசாயிகளுக்கு மானிய உரமும் ஜனாதிபதி உள்ளிட்ட அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கடற்தொழில் அமைச் சர் டக்ளஸ் தோனந்தா, கிராமிய அபிவி ருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ் தான், நகர அபிவிருத்தி வீடமைப்பு இரா ஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்தி ரன், செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துல சேனா, மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரி கள், ஜனாதிபதி செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## தீர்வுக்கு உறுதுணையாக ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்குகான இந்த செயலணியை திறந்து வைப்பதற்காக வருகை தந்த மைக்காக வடக்கில் இருந்து அவரை நாம் வரவேற்கின்றோம். வடக்கு, கிழக் குக்கு விசேடமான ஒரு நிதியை அவர் பிரதமராக இருந்த போது பனை நிதியம் என உருவாக்கியிருந்தார். போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் எழுச் சிக்காக அது உருவாதக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் மீள் எழுச்சிக்காக அன்றே கவனம் செலுத்தியிருந்தார். தற் போது ஜனாதிபதியாக மிகவும் முக்கிய மான இந்த நடவடிக்கையை முன்னெ டுக்கும் போது நாம் வாழ்த்து கூறுகின் றோம். இந்த விடயத்தில் சேர்ந்து இயங்கு வோம் என உறுதியளிக்கிறோம்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்த லில் அவர் போட்டியிட்ட போது சமஷ்டித் தீர்வை முன்வைத்து போட்டியிட்டார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியின் வரவு – செலவுத் திட்டம்!

## ஹக்கீம் புகழாரம்



நாட்டில் காணப்படும் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் விமர்சனத்துக்கு உரியதல்ல என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.


முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்கு வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்றும் நாட்டின் சட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படாமை பிரச்சினைக்கு வழிகோலுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

30 வருட யுத்தத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் மத்திய தர வருமான நாடாக இருந்த இலங்கை குறைந்த வருமானம் கொண்ட நாடாக மாற்றப்பட்டுள்ளது என்றும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக் கொள்ள பலரும் முன்வைத்த யோசனைகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டுள்ளார்.









காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணிலுக்கு புரிந்த உரை

நேற்று வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஆற்றியது மிகச் சிறிய உரை என்றாலும் அந்த உரையில் பூடகமாக சில விடயங்களை காத்திரமாகவும், உருப்படியாகவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் எடுத்துரைத்திருக்கின்றார்.

மேலோட்டமாக பார்த்தால் வாசகர்களுக்கு அல்லது அந்தப் பேச்சை கேட்பவர்களுக்கு அதன் அர்த்தமும், உள்ளார்ந்தமும், ஆழமும் புரியாது. புரிய வாய்ப்பில்லை.

ஆனால் அதன் பொருளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு புரிந்து கொண்டார் என்பதை அந்தக் கூட்டத்தின் பின்னர், மதியம் உணவு அருந்தும் போது தம்முடன் உரையாடியவர்களுக்கு அந்த உரையை ஒட்டி ரணில் சிலாகித்துக் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

சுமந்திரன் கூறிய விடயம் 2005 ஜனாதிபதி தேர்தலை ஒட்டி நடந்தவை.

'அப்போது நீங்கள் சமஷ்டித் தீர்வை ஏற்று, அதை ஆதரித்துத்தான் பிரசாரத்தை முன்னெடுத்தீர்கள்!' – என்று ரணிலை பார்த்து நினைவூட்டினார் சுமந்திரன்.

இப்போது தமிழ் கட்சிகளாகிய நாங்கள் அதனைத் தானே கேட்கிறோம், அதனைத் தருவதுதானே என்ற பாணியில் கேட்காமல் கேட்பது போல் அமைந்தது சுமந்திரனின் பேச்சு.

அந்தச் சந்தர்ப்பத்தில் வடமாகாணம் காலை இடறி விட்டது என்று சுமந்திரன் குறிப்பிட்டமை, தேர்தலைப் பரிஷ்கரித்து வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் ரணிலின் தோல்விக்கு காரணமாக அமைந்தார்கள் என்பது பற்றியதாகும்.

அடுத்த விடயம் 'தேர்தலில் உங்கள் தோல்விக்குக் காரணமாக அமைந்தவர்கள் இன்று உங்களுடன்தான் இருக்கின்றார்கள், அவர்களுடன் சேர்ந்துதான் அரசு அமைத்திருக்கின்றீர்கள்' என்று கூறி, பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் பற்றி பிரஸ்தாபித்தார் சுமந்திரன். பலருக்கும் இந்த விடயம் விளங்கவில்லை.

அந்தப் பதவியில் இப்போது இருப்பவர் டிரான் அலஸ். 2005 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பஸில் ராஜபக்ஷவுடன் வன்னிக்குச் சென்று, புலிகளின் நிர்வாக சேவை பொறுப்பாளர் பூவண்ணனுடன் பேசி, தமிழ் மக்களைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கச் செய்யும் ஒழுங்கைப் புலிகளுடன் செய்தவர் இவர்( டிரான் அலஸ்) என்றும், அப்போது நிதி கைமாறப்பட்டது என்றும் கூடப் பேச்சு உண்டு.

அப்படி செய்தவரும் – டிரான் அலஸும் – இப்போது உங்களுடன் என்று ஜனாதிபதி ரணிலிடம் சுட்டினார் சுமந்திரன்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சமஷ்டித் தீர்வு காண புலிகளுடன் இணங்கியது ரணில் பிரதமராக இருந்த அரசுதான்.

2005 ஜனாதிபதி தேர்தலின் போது சமஷ்டித் தீர்வு குறித்து தமது பிரசாரத்தில் எடுத்துரைத்தவரும் அவர்தான்.

நல்லாட்சி அரசில், புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான வழிகாட்டுக் குழுவின் ஆரம்ப கூட்டங்களில் சமஷ்டித் தீர்வின் முக்கியத்துவத்தை சிலாகித்து தொடர்ந்து வலியுறுத்தியவரும் அதே ரணில்தான்.

அத்தகைய நீங்கள் (ரணில்), இப்போது சமஷ்டித் தீர்வை முன்னெடுப்பதுதானே நியாயம் என்ற தொனியில் அமைந்தது சுமந்திரனின் அந்தச் சுருக்க உரை.

அதை ரணில் நன்கு புரிந்து கொண்டார் என்ற பிரதிபலிப்புகள் – சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றமை வரவேற்கத்தக்க அம்சம்தான்.

# ஓமானுக்கு பணிப்பெண்ணாக சென்ற தனது மகள் உட்பட 90 பெண்களை மீட்டுத்தருமாறு தாயொருவர் வேண்டுகோள்!

ஓமானுக்கு வீட்டு பணிப்பெண்ணாக சென்று சித்திரவதைக்கு உட்பட்டுவரும் தனது மகள் உட்பட 90 பெண்களை மீட்டுத்தருமாறு ஓட்டமாவடியைச் சேர்ந்த தாய் ஒருவர் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்துள்ளார். மட்டக்களப்பு ஓட்டமாவடி பாலைநகரைச் சேர்ந்த 51 வயதுடைய 5 பிள்ளைகளின் தாயாரான முகமது இஸ்மாயில் சித்திக் நிசாவே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். மட்டக்களப்பு ஓட்டமாவடி பாலை நகரைச் சேர்ந்த 22 வயதுடைய 2 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாரான முகமது அஸீம் பாத்திமா ஹமீதியாவே இவ்வாறு வெளிநாடு சென்றுள்ளார்.

இலங்கையில் இருந்து தனது மகளை டுபாயில் வீட்டு பணிக்காக அழைத்துச் செல்வதாக முகவரகம் பொய்க்கூறி, ஓமானுக்கு கொண்டு சென்று விற்பனை செய்துள்ளதாக தாயார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வேலைவாய்ப்பு பணியகம், 16 தரம் வேலைவாய்ப்பு பணியகம், மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர் நன்னடத்தை பிரிவு என கடந்த 9 மாதங்களாகத் தனது மகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுத்தும் எவ்வித பலனும் அளிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

தனது மகள், அவருடன் அங்கு 90 பேர் இவ்வாறு சித்திரவதை செய்யப்படுகின்றமைக்கான காணொலியொன்றை அனுப்பியுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை அந்த பகுதியைச் சேர்ந்த 9, 10 வயது இருபெண் குழந்தைகளின் தாயாரான பர்பிமா ஸபீரா என்பவரும் கடந்த மூன்று மாதங்களாக எவ்வித தொடர்பும் இன்றி இருப்பதால், அவரையும் மீட்டுதருமாறு அவரது தாயார் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வரவு - செலவுத் திட்டம் திருப்திகரமானதாம்!

## ராஜித கூறுகிறார்



2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் உள்ள பல முன்மொழிவுகள் திருப்திகரமாக அமைந்துள்ளன என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று (சனிக்கிழமை) நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு கணனி வழங்கும் வேலைத்திட்டத்தை தாம் அரசாங்கத்தில் இருந்த போது நிறைவேற்ற முடியாத நிலை காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது நல்லது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்களின் விலை குறித்து ரஞ்சித் சியம்பலாபிட்டிய விளக்கம்!

வற் வரி பாடசாலைப் பொருள்கள் மற்றும் உபகரணங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துமாயின் அது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

வற் வரி விதிப்பால் பாடசாலைப் பொருள்களின் விலைகள் கணிசமாக உயர்ந்துள்ளன என எதிர்க்கட்சிகள் சாடியுள்ள நிலையில், நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு மாத்திரமே வற் வரி விதிக்கப்பட்டுள்ளது. வற் வரி மூலம் பெறப்படும் வருமானம் இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உள்நாட்டில் பாடசாலைப் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் உள்ளூர் பாடசாலைப் பொருள்களின் விலை உயர்த்தப்படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அடுத்த வருட இறுதியில் பணவீக்கத்தை 4 – 5 சதவீதம் அளவில் பேணமுடியும்!

## மத்திய வங்கி தெரிவிப்பு

தற்போதைய நிதிக் கொள்கைகளுக்கு அமைய அடுத்த வருட இறுதியாகும்போது பணவீக்கத்தை 4 –5 சதவீதம் அளவில் பேணமுடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார் என நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாறுபட்ட வட்டி விகிதங்களின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், அசௌகரியங்களுக்கு உள்ளான வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் வங்கிகளுக்கு மத்திய வங்கி பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட்டி விகித அதிகரிப்பு காரணமாக சில கடனாளிகளின் சம்பளம் முழுவதும் கடன் தவணையாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சபை உறுப்பினர்கள் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையால், வாடிக்கையாளர்களுக்கு வங்கியுடன் பேச்சு நடத்தி, குறிப்பிட்ட சலுகைக் காலத்துக்கு உரிய வட்டியை மட்டும் செலுத்தும் வாய்ப்பு இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."
- ஜோன் மூர் -
(அமெரிக்க இயற்கையியலாளர்)

# பெரமுன பற்றி அவதூறு பரப்புபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும்!

## சாகரவுக்கு மஹிந்த அறிவுறுத்து

கொழும்பு, நவ. 20

சமூக வலைத்தளங்களில் பெரமுன பற்றி அவதூறு பரப்புபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவிக்கையில் –

சமூக வலைத்தளங்கள் ஊடாக அவதூறு பரப்புரைகளை பரப்பும் பலர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், இது தொடர்பான விவரங்களை கட்சி சட்ட குழுவிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் சமூக வலைத்தளங்களில் பல்வேறு பெயர்களில் தோன்றி பொதுஜன பெரமுன மீதும் அக்கட்சியின் தலைவர்கள் மீதும் சேறு பூச இந்த குழுக்கள் முனைகின்றன எனவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். உணவகங்களில் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை



யாழ். மாநகரில் உள்ள உணவகங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடத்திய பரிசோதனை நடவடிக்கையில் தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவகங்களில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குளிர்சாதனப் பெட்டியில் சீர்கேடாகவும் தீங்கு விளைவிக்கும் வகையில் வைத்திருக்கப்பட்ட மீன், இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

மேலும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான நிற ஊட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களும் அழிக்கப்பட்டன.

அத்துடன் இரண்டு வாரங்களுக்கு அனைத்தும் சீர் செய்யப்படாவிடின் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விடுத்தனர்.

# ஒட்டுசுட்டானில் வயல் விழா நிகழ்வு





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வித்தியாபுரம் கிராமத்தில் முல்லைத்தீவு விவசாய திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் வழிகாட்டலில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் அனுசரணையில் ஒட்டுசுட்டான் விவசாய போதனாசிரியரின் ஒழுங்குபடுத்தலில் நெற் செய்கையில் பயன்படுத்தப்படும் பரசூட்முறை மூலமான நாற்று நடுகை தொழில்நுட்பங்கள், இயந்திர நாற்று நடுகை முறை மூலமான நாற்று நடுகை தொழில்நுட்பங்கள், உரம் விதையிடும் கருவி மூலமான விதைப்பு தொழில்நுட்பங்கள் உள்ளடக்கிய வயல் விழா நடைபெற்றது

இந்த வயல் விழாவில் மூன்று முறைகளையும் முன்மாதிரியாக செய்முறை ரீதியாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர், Csiap திட்டத்தின் விவசாய நிபுணர், கமநல அபிவிருத்தி உத்தியோகஸ்தர், ஒட்டுசுட்டான் பாடவிதான உத்தியோகஸ்தர், விவசாய போதனாசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

## திருமணத்தை இலகுவாக்கும் ஒரு முயற்சி

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களிலிருந்து
உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

**மற்றும் சிறப்பு பட்டிமன்றம் இடம்பெறும்**

சிறப்பு பேச்சு
**திருமண தாமதம் ஏதனால்**
ஜோதிடர் விளக்கம்



**சிறப்பு விருந்தினர்**
இந்தியாவிலிருந்து பிரபல ஜோதிடர்
**பட்டுக்கோட்டை சுப்ரமணியன்**

**வெள்ளவத்தை 27-11-2022**

**கொழும்பு தமிழ்ச்சங்கம்**
**9.00am to 2.00pm**

**யாழ்ப்பாணம் 20-11-2022**

**செல்வ மஹால்**
1229, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
**9.00am to 2.00pm**

**500 மணமக்கள் விபரம்
அடங்கிய அருந்ததி
இதழை பெற்றுக்கொள்ளமுடியும்**

**www.arunthathee.com | +94 777 164 524**

இந்தியாவிலிருந்து

# பிரபல ஜோதிடர்

## பட்டுக்கோட்டை சுப்ரமணியன்



உங்கள் ஜாதக பலன்களை
அறிந்துகொள்வதற்கு

**யாழ்ப்பாணம்**

**நவம்பர் 20, 21, 22**
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

**வெள்ளவத்தை**

**நவம்பர் 24, 25, 26**
541/2 காலி வீதி வெள்ளளவத்தை

**074 172 4524**

காலைக்கதிர் Kalaikkathir

# போரில் சிக்கியுள்ள உக்ரைன் மக்களின் பாதுகாப்புக் குறித்து இந்தியா கவலை!

உக்ரைனில் நடந்து வரும் மோதல் காரணமாக உலகம் முழுவதும் எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்து வளர்ந்து வரும் தனது கவலையை இந்தியா கடந்த புதன்கிழமை தெரிவித்தது.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் உக்ரைன் மீதான விவாதத்தில் உரையாற்றிய ஐ.நாவுக்கான இந்தியாவின் உயர்மட்ட தூதர், உக்ரைன் மோதலின் எதிர்மறையான தாக்கத்தை குறிப்பாக வளரும் நாடுகளின் நெருக்கடியை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

உக்ரைன் மோதலின் தாக்கம் ஐரோப்பாவில் மட்டும் இல்லை, குறிப்பாகத் தெற்குப் பூகோளத்தில் கடுமையான பொருளாதார விளைவுகளை எதிர்கொள்கிறது. தொற்றுநோய் காரணமாக கடுமையான மன அழுத்தத்திற்குப் பிறகு மோதலினால் எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பில் அதிகரித்து வரும் கவலையை நாங்கள் காண்கிறோம் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருசிரா காம்போஜ் கூறினார்.

“ஐ.நா.வின் கருங்கடல் தானியங்கள் மற்றும் உரப்பொதி ஒப்பந்தம் வரும் நாள்களில் புதுப்பிக்கப்படும் என்றும், இது அனைத்துத் தரப்பினராலும் அனைத்து அம்சங்களிலும் ஆர்வத்துடன் செயல்படுத்தப்படும் என்றும் நாங்கள் மிகவும் நம்புகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.



உக்ரைனில் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் மின்சாரம், தண்ணீர் அல்லது வெப்பம் இல்லாத நிலையில், நாட்டின் 24 பிராந்தியங்களில் குறைந்தபட்சம் 16 பகுதிகளிலும், தலைநகர் கீவ்விலும் முக்கியமான



உள்கட்டமைப்பைத் தாக்கிய ஏவுகணைத் தாக்குதல்களின் அலையைத் தொடர்ந்து, சமீபத்திய ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலின் மாநாடு வந்துள்ளது.

புதிய ஏவுகணைத் தாக்குதல்கள் – எரிசக்தி அமைச்சின் கூற்றுப்படி, போரின் தொடக்கத்திலிருந்து ஆற்றல் உள்கட்டமைப்பின் மீதான மிகப்பெரிய தாக்குதல் – நாடு முழுவதும் ரயில்களில் பரவலான தாமதத்தை ஏற்படுத்தியது. மில்லியன் கணக்கான மக்களை தொலைத்தொடர்பு இல்லாமல் செய்துள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிவிலியன் உள்கட்டமைப்புக்கு சேதம் ஏற்படுவது, வெப்பநிலை பூஜ்ஜியத்திற்கு கீழே குறைந்து வரும் ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது. கடுமையான உக்ரேனிய குளிர்காலத்தில் மக்கள் தங்கள் வீடுகளை சூடாக்க முடியாத நிலைமை,கடுமையான மனிதாபிமான நெருக்கடி பற்றிய கவலைகளை எழுப்புகிறது.

உக்ரைனின் நிலைமை மற்றும் குடிமக்களின் உள்கட்டமைப்பை குறிவைப்பது குறித்து இந்தியா தொடர்ந்து கவலை கொண்டுள்ளது என்று நிரந்தரப் பிரதிநிதி காம்போஜ் கூறினார்.

“மோதலின் தொடக்கத்திலிருந்தே, இந்தியா உடனடியாக விரோதப் போக்கை நிறுத்தவும், வன்முறையை நிறுத்தவும் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறது. அதனால், மோதல் விரிவாக்கத்தைக் குறைக்கும் அனைத்து முயற்சிகளையும் ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம், என்று அவர் கூறினார்.

புதன்கிழமை, ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் வெளியிட்ட தகவல்களின் பிரகாரம், ஏவுகணைத் தாக்குதல்களின் புதிய அலை – எரிசக்தி அமைச்சின் கூற்றுப்படி, போரின் தொடக்கத்திலிருந்து ஆற்றல் உள்கட்டமைப்பின் மீதான மிகப்பெரிய தாக்குதல் – நாடு முழுவதும் ரயில்களில் பரவலான தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. மில்லியன் கணக்கான மக்களுக்கு தொலைத்தொடர்பு இல்லாமல் செய்துள்ளது.

மேற்கு டெர்னோபில் அல்லது எல்விவ் போன்ற பகுதிகளில் 80 முதல் 90 சதவிகிதம் வரையிலான மக்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளார்கள். மேற்கு இவானோ – பிராங்கிவ்ஸ்கா பகுதி மற்றும் கிழக்கு கார்கிவ் பிராந்தியத்தில் நீர் விநியோக அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் உள்ள பிற பகுதிகள் மற்றும் நகரங்களில் உள்ள மக்கள் இதேபோன்ற சவால்கள் நிலையை எதிர்கொள்கின்றனர். என்று ஐ.நா. முகவர் அமைப்புகள் கூறுகின்றன.

**(மூலம்: ‘த எக்கனமிக் ரைம்ஸ்’)**

# இந்தியா - எமிரேட்ஸ் - சவுதி இடையில் புதிதாக முத்தரப்பு சரக்குக் கப்பல் சேவை

நவம்பர் 2022 இன் கடைசி வாரத்தில் இருந்து மெர்ஸ்க் ஒரு புதிய கடல் கப்பல் சேவையான ஷாஹீன் எக்ஸ்பிரஸைத் தொடங்குகிறது.

இந்தக் கப்பல் முந்த்ரா, பிபாவாவ், ஜெபல் அலி, தம்மம் மற்றும் ஜெபல் அலிக்கு இடையே சுழன்று முந்த்ராவுக்குத் திரும்பி வரும். இதன் மூலம் நிலையான மற்றும் நம்பகமான சேவையை அது. இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் – சவுதி அரேபியா வழித்தடத்தில் உருவாக்கும்.

புதிய சேவையானது இந்திய மற்றும் வளைகுடா சந்தைகளுக்கு இடையே வர்த்தகம் செய்யும் வாடிக்கையாளர்களுக்கான அதிகரித்து வரும் தேவையை நிவர்த்தி செய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது.

சந்தைகள் நிலைபெறத் தொடங்கியுள்ளன. கொவிட் – 19 தொற்றுநோயால் ஏற்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஏற்பட்ட இடையூறுகளுக்குப் பிறகு கடல் வலையமைப்புகள் இயல்பாக்கப்படுகின்றன. இந்த நேரத்தில், எங்கள் வாடிக்கையாளர்களின் அனைத்து சவால்களையும் நாங்கள் நிவர்த்தி செய்வதை உறுதிசெய்ய கடுமையாக முயற்சி செய்ததோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் அவர்களின் தேவைகள் என்ன என்பதை எதிர்நோக்கிப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. எங்கள் வாடிக்கையாளர் உரையாடல்களின் மூலம், அதிகரித்து வரும் தேவையைச் சுற்றி மிகவும் அர்த்தமுள்ள முன்னறிவிப்பைச் செய்ய முடிந்தது. இந்தத் தேவைக்கு இடவசதியை உருவாக்குவதற்கு ஒரு புதிய சேவையை முன்னெச்சரிக்கையுடன் வரிசைப்படுத்த முடிந்தது – என்று மேர்ஸ்க் மேற்கு மற்றும் மத்திய ஆசியாவின் பிராந்திய கடல் மேலாண்மைத் தலைவர் பவன் வேம்படி கூறினார். .

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் மே 2022 இல் நடைமுறைக்கு வந்தது, இது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தின் அளவை சீராக உயர்த்துகிறது. இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே நகரும் முக்கிய பொருள்களில், அதிகரித்த திறனால் பயனடையும் எவ்.எம்.சி.ஜி. (வேகமாக நகரும் நுகர்வோர் பொருள்கள்) எலக்ட்ரானிக்ஸ், அழிந்துபோகக்கூடிய உணவுப் பொருள்கள், ஜவுளி மற்றும் ஆடை உள்ளிட்ட சில்லறை பொருள்கள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவை அடங்கும்.

ஷாஹீன் எக்ஸ்பிரஸ் சவுதி அரேபியாவின் கிழக்கு மாகாணத்தில் இருந்து பெட்ரோ கெமிக்கல் துறையின் ஏற்றுமதியாளர்களுக்கு பயனளிக்கும்.

தற்போதுள்ள சேவைகளுடன் ஒப்பிடுகையில், இந்திய துறைமுகங்கள் மற்றும் வளைகுடா துறைமுகங்களுக்கு இடையே மேம்பட்ட போக்குவரத்து நேரத்தையும், சிறந்த முன்கணிப்பையும் இந்த கப்பல் வழங்கும்.

பவன் வேம்படி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். அவர்களுக்கு நம்பகமான சேவையை வழங்க விரும்புகிறோம். எங்கள் வாடிக்கையாளர்களுடன் வலுவான கூட்டாண்மைகளை நாங்கள் தொடர்ந்து உருவாக்குவோம் மற்றும் அவர்களின் வணிகத்திற்கான மதிப்பை உருவாக்கும் மற்றும் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வடிவமைப்பு தீர்வுகளை உருவாக்குவோம்.” – என்றார்.



இந்த சேபையில் வாரத்திற்கு 1,700 (இருபது அடி) கெண்டெயினர்கள் கொண்டியங்கும் பெயரளவு திறன் கொண்ட இரண்டு கப்பல்கள் இருக்கும்.

**(மூலம்: ‘த எக்கனமிக் ரைம்ஸ்’)**

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 20th of November 2022



We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com


# Smart Money



It's important to know how much things cost. That way, you can use your money wisely. An item's price tag has what you need. But stores also offer discounts, or sales. Then you need to find out what something costs after the discount. For example, say you want to buy a DVD. That DVD costs $24.00, but one company is offering a 10 percent discount. How much will it cost after the discount? It is easy to find out. First, change 10 percent to a dollar amount. Ten percent of $24.00 is $2.40. Now, subtract that $2.40 from the original $24.00. If the DVD you want is offered at a 10 percent discount, your final cost will be $21.60.

**1. What is the first step in figuring out what a price will be after a discount?**

A. Pay the final cost of the item.
B. Subtract the discount amount from the original price.
C. Convert the percentage discount to a dollar amount.
D. Buy a DVD.

**2. When does a shopper need to calculate what something will cost?**

A. when wasting money
B. when wanting to buy a DVD
C. when reading a price tag
D. when a store offers a discount

**3. Which word shares the same root word as reduced?**

A. reduction B. redden
C. redo D. duck

**4. Which is a synonym for calculate?**

A. cost B. discount
C. buy D. figure out

**5. What is true about an item's final cost?**

A. It is always on the price tag.
B. It is the price after the discount.
C. It is too expensive.
D. It is the price before the discount

---

Occasionally, stores have discounts if you buy more than one of an item. Here is how those discounts work: Suppose you are buying jeans. One pair of jeans costs $32.00. But the store is now offering a deal: two pairs of jeans for $50.00. It costs more to buy two pairs of jeans than one pair. However, if you buy two pairs of jeans for $50.00, each pair costs $25.00 instead of $32.00. You may actually be better off spending more to buy two pairs of jeans at the lower price.

**1. Which of these is the topic sentence of this paragraph?**

A. Occasionally, stores have discounts if you buy more than one of an item.
B. Suppose you are buying jeans.
C. Here is how those discounts work.
D. If you buy two pairs of jeans for $50.00, each pair costs $25.00 instead of $32.00.

**2. What is the main idea of this paragraph?**

A. Occasionally, stores offer special discounts.
B. Your favorite kind of jeans cost $32.00.
C. You can sometimes save money when you buy more than one of something.
D. You will not save any money if you buy two of something.

**3. What does the word occasionally tell readers about when stores offer discounts?**

A. always B. sometimes
C. never D. used to

**4. Which is a synonym for actually?**

A. sadly B. happily
C. never D. really

**5. What do the words occasionally, actually, and carefully have in common?**

A. They are all nouns. B. They are all adjectives.
C. They are all adverbs. D. They are all pronouns.

---

One way you can spend your money wisely is to buy larger packages of things. For example, suppose you want to buy food for your puppy. At the store, you find that a 4.4-pound bag of dog food costs $5.24 and a 17.6-pound bag costs $12.44. The larger bag of food costs more than the smaller bag. But if you think about it, you are spending your money wisely if you buy the bigger bag. Here is why: If you buy the smaller bag of food, you are paying $1.19 per pound, but if you buy the larger bag, you pay $0.71 per pound. You are getting more food for your money if you buy the larger bag.

**1. What does the first sentence of the text tell you about how a person can spend money wisely?**

A. by buying puppy food
B. by buying larger packages of things
C. by buying the smallest package available
D. by getting a new puppy

**2. How does purchasing a small bag of puppy food compare to purchasing a larger bag?**

A. You pay more per pound for the small bag of puppy food.
B. You pay less per pound for the small bag of puppy food.
C. You pay the same.
D. You pay nothing.

**3. What does the word per mean?**

A. poor B. puppy food
C. for each D. pound

**4. In the first sentence, what word does wisely tell the reader more about?**

A. your B. way
C. money D. spend

**5. How are the words bigger and larger related?**

A. They are examples of alliteration.
B. They are similes.
C. They are synonyms.
D. They are antonyms.

" TO BE PREPARED FOR WAR IS ONE OF THE BEST MEANS OF PRESERVING PEACE" - GEORGE WASHINGTON

# Smart Money



Have you ever considered the way you spend your money? What do you buy? When do you buy? It is important to use your money wisely. Then, you will have enough for the things you want. You can make smart decisions about your money. All it takes is some careful, smart thinking.

One way to be smart with your money is to shop around before you buy. Visit more than one store, check the prices at each store, and try not to be in a hurry to buy. You do not have to buy at the first store you visit; another store might have what you want at a lower price. You can even check online and compare prices.

Another way to be smart with your money is to wait for a sale. Many stores offer special discounts. For example, suppose you want to buy a camera. Wait until a store has a sale. You can save 20 percent, 30 percent, or more on the price of the camera by waiting for a sale. Some stores also offer a discount if you buy more than one of an item. So, look for sales offering a lower price per item if you buy two of that item. You could save money.

You can also use your money wisely by buying larger sizes of things. For instance, large bags of dog food usually cost less per pound than small bags cost. A large pack of pens usually costs less per pen than a small pack of pens. So, even though you may spend more on a large size, you are really saving money per item.

You can learn to be smart with your money. It takes some practice, and it takes patience. You cannot always have what you want right away. But if you are patient, you will save money. Then, you will have more money to spend on what you want.

**1. Which is one way to save money?**

A. by shopping at only one store
B. by buying everything you want
C. by purchasing small packages of items
D. by shopping during sales

**2. How could people spend too much money?**

A. by shopping in a hurry
B. by buying larger sizes
C. by waiting for sales
D. by looking for discounts

**3. What is the author's purpose?**

A. to tell how to get somewhere
B. to get you to travel
C. to tell you how to do something
D. to tell a personal story

**4. Which is not a topic sentence?**

A. Another way to be smart with your money is to wait for a sale.
B. A large pack of pens costs less per pen than a small pack of pens.
C. You can make smart decisions about your money.
D. One way to be smart with your money is to shop around before you buy

**5. Where does the text offer suggestions for how to be smart with your money?**

A. the introduction
B. the conclusion
C. the three body paragraphs
D. the topic sentence

**6. What is likely true about people who are smart with their money?**

A. They are impatient.
B. They are patient.
C. They are jealous.
D. They are lazy.

**7. How might you summarize this text for someone who has not read it yet?**

A. It tells how to get to a store.
B. It tells what to do if you win money.
C. It tells how to find a new camera.
D. It tells ways to use money wisely.

**8. Which is a good summary of the author's lesson in this text?**

A. Being careful with money is wise.
B. It is not important to save money.
C. Comparing prices takes patience.
D. It is not a good idea to wait for a sale

# The Movie

The sun was rising as the dark cloud blocked it. There was a roar of thunder. Robert and his friend, Sid were walking to school. They were holding umbrellas. There was no one around. "I watched a ghost movie last night. It still sends shivers down my spine," Sid said. "What happened at first?" Robert asked. "A man was walking when a peacock fell from a tree and lay dead in front of him…".

Suddenly,a peacock fell from nowhere and lay dead in front of them. "Aahh! Close call," they screamed. "This is so rare. Never mind, lets keep walking. We don't want to miss school!" Robert said. "Tell me more,".


"The man saw a person staring at him from around the corner. He wore a hoodie," Sid continued. "Then the haunt of the ghost affected the man,".

At that moment, they saw a person staring at them from around the corner with red eyes, wearing a hoodie. "Ok ok, I have had enough of whatever this 'ghost movie' is. Lets talk about something else, like homework," Robert said.

Thus they decided upon talking about homework till they reach the school gate. "What! I got it wrong!" Sid exclaimed. However the eerie sound behind them made their arms and hands shake wildly. "Um,whats that sound," Robert asked nervously with wide eyes.

Without hesitation,they bolted towards the school gate. The moment they reached the school gate, they gathered enough courage and looked back. They saw something that made them jump out of their skin. A girl,with hair covering her face was crawling on the ground. At once she pounced on Robert and Sid from five metres away.

By:A.Nithun




An all-time classic story of a gingerbread man that was baked by a lady cook for a young boy named Bobby. The gingerbread looked like a jolly little man but as soon as he was taken out of the oven, it ran away.

What follows is a funny little chase that involves the cook, a cat, a dog, and a monkey till finally, Bobby manages to enjoy the dish made for him.

Explore the full story or listen to the podcast of "The Little Gingerbread Man"

# John F. Kennedy Speech, We choose to go to the Moon

## We choose to go to the Moon speech by John F. Kennedy September 12th 1962




We meet at a college noted for knowledge, in a city noted for progress, in a state noted for strength, and we stand in need of all three, for we meet in an hour of change and challenge, in a decade of hope and fear, in an age of both knowledge and ignorance. The greater our knowledge increases, the greater our ignorance unfolds.

Despite the striking fact that most of the scientists that the world has ever known are alive and working today, despite the fact that this Nation's own scientific manpower is doubling every 12 years in a rate of growth more than three times that of our population as a whole, despite that, the vast stretches of the unknown and the unanswered and the unfinished still far outstrip our collective comprehension.

No man can fully grasp how far and how fast we have come, but condense, if you will, the 50,000 years

of man's recorded history in a time span of but a half-century. Stated in these terms, we know very little about the first 40 years, except at the end of them advanced man had learned to use the skins of animals to cover them. Then about 10 years ago, under this standard, man emerged from his caves to construct other kinds of shelter. Only five years ago man learned to write and use a cart with wheels. Christianity began less than two years ago. The printing press came this year, and then less than two months ago, during this whole 50-year span of human history, the steam engine provided a new source of power. Newton explored the meaning of gravity. Last month electric lights and telephones and automobiles and airplanes became available. Only last week did we develop penicillin and television and nuclear power, and now if America's new spacecraft succeeds in reaching Venus, we will have literally reached the stars before midnight tonight.

This is a breathtaking pace, and such a pace cannot help but create new ills as it dispels old, new ignorance, new problems, new dangers. Surely the opening vistas of space promise high costs and hardships, as well as high reward.

So it is not surprising that some would have us stay where we are a little longer to rest, to wait. But this city of Houston, this state of Texas, this country of the United States was not built by those who waited and rested and wished to look behind them. This country was conquered by those who moved forward--and so will space.

William Bradford, speaking in 1630 of the founding of the Plymouth Bay Colony, said that all great and honorable actions are accompanied with great difficulties, and both must be enterprised and overcome with answerable courage.

If this capsule history of our progress teaches us anything, it is that man, in his quest for knowledge and progress, is determined and cannot be deterred. The exploration of space will go ahead, whether we join in it or not, and it is one of the great adventures of all time, and no nation which expects to be the leader of other nations can expect to stay behind in this race for space.

Those who came before us made certain that this country rode the first waves of the industrial revolution, the first waves of modern invention, and the first wave of nuclear power, and this generation does not intend to founder in the backwash of the coming age of space. We mean to be a part of it--we mean to lead it. For the eyes of the world now look into space, to the moon and to the planets beyond, and we have vowed that we shall not see it governed by a hostile flag of conquest, but by a banner of freedom and peace. We have vowed that we shall not see space filled with weapons of mass destruction, but with instruments of knowledge and understanding.

Yet the vows of this Nation can only be fulfilled if we in this Nation are first, and, therefore, we intend to be first. In short, our leadership in science and industry, our hopes for peace and security, our obligations to ourselves as well as others, all require us to make this effort, to solve these mysteries, to solve them for the good of all men, and to become the world's leading space-faring nation. We set sail on this new sea because there is new knowledge to be gained, and new rights to be won, and they must be won and used for the progress of all people. For space science, like nuclear science and all technology, has no conscience of its own. Whether it will become a force for good or ill depends on man, and only if the United States occupies a position of pre-eminence can we help decide whether this new ocean will be a sea of peace or a new terrifying theater of war. I do not say that we should or will go unprotected against the hostile misuse of space any more than we go unprotected against the hostile use of land or sea, but I do say that space can be explored and mastered without feeding the fires of war, without repeating the mistakes that man has made in extending his writ around this globe of ours.

There is no strife, no prejudice, no national conflict in outer space as yet. Its hazards are hostile to us all. Its conquest deserves the best of all mankind, and its opportunity for peaceful cooperation many never come again. But why, some say, the moon? Why choose this as our goal? And they may well ask why climb the highest mountain? Why, 35 years ago, fly the Atlantic? Why does Rice play Texas? We choose to go to the moon. We choose to go to the moon in this decade and do the other things, not because they are easy, but because they are hard, because that goal will serve to organize and measure the best of our energies and skills, because that challenge is one that we are willing to accept, one we are unwilling to postpone, and one which we intend to win, and the others, too.

It is for these reasons that I regard the decision last year to shift our efforts in space from low to high gear as among the most important decisions that will be made during my incumbency in the office of the Presidency. In the last 24 hours we have seen facilities now being created for the greatest and most complex exploration in man's history. We have felt the ground shake and the air shattered by the testing of a Saturn C-1 booster rocket, many times as powerful as the Atlas which launched John Glenn, generating power equivalent to 10,000 automobiles with their accelerators on the floor. We have seen the site where five F-1 rocket engines, each one as powerful as all eight engines of the Saturn

combined, will be clustered together to make the advanced Saturn missile, assembled in a new building to be built at Cape Canaveral as tall as a 48 story structure, as wide as a city block, and as long as two lengths of this field.

Within these last 19 months at least 45 satellites have circled the earth. Some 40 of them were made in the United States of America and they were far more sophisticated and supplied far more knowledge to the people of the world than those of the Soviet Union.

The Mariner spacecraft now on its way to Venus is the most intricate instrument in the history of

space science. The accuracy of that shot is comparable to firing a missile from Cape Canaveral and dropping it in this stadium between the 40-yard lines.

Transit satellites are helping our ships at sea to steer a safer course. Tiros satellites have given us unprecedented warnings of hurricanes and storms, and will do the same for forest fires and icebergs.

We have had our failures, but so have others, even if they do not admit them. And they may be less public. To be sure, we are behind, and will be behind for some time in manned flight. But we do not intend to stay behind, and in this decade, we shall make up and move ahead. The growth of our science and education will be enriched by new knowledge of our universe and environment, by new techniques of learning and mapping and observation, by new tools and computers for industry, medicine, the home as well as the school. Technical institutions, such as Rice, will reap the harvest of these gains.

And finally, the space effort itself, while still in its infancy, has already created a great number of new companies, and tens of thousands of new jobs. Space and related industries are generating new demands in investment and skilled personnel, and this city and this state, and this region, will share greatly in this growth. What was once the furthest outpost on the old frontier of the West will be the furthest outpost on the new frontier of science and space. Houston, your city of Houston, with its Manned Spacecraft Center, will become the heart of a large scientific and engineering community.

During the next 5 years the National Aeronautics and Space Administration expects to double the

number of scientists and engineers in this area, to increase its outlays for salaries and expenses to $60

million a year; to invest some $200 million in plant and laboratory facilities; and to direct or contract

for new space efforts over $1 billion from this center in this city.

To be sure, all this costs us all a good deal of money. This year's space budget is three times what it

was in January 1961, and it is greater than the space budget of the previous eight years combined.

That budget now stands at $5,400 million a year--a staggering sum, though somewhat less than we

pay for cigarettes and cigars every year. Space expenditures will soon rise some more, from 40 cents

per person per week to more than 50 cents a week for every man, woman and child in the United

States, for we have given this program a high national priority--even though I realize that this is in

some measure an act of faith and vision, for we do not now know what benefits await us. But if I were

to say, my fellow citizens, that we shall send to the moon, 240,000 miles away from the control station

in Houston, a giant rocket more than 300 feet tall, the length of this football field, made of new metal

alloys, some of which have not yet been invented, capable of standing heat and stresses several times

more than have ever been experienced, fitted together with a precision better than the finest watch,

carrying all the equipment needed for propulsion, guidance, control, communications, food and

survival, on an untried mission, to an unknown celestial body, and then return it safely to earth, reentering the atmosphere at speeds of over 25,000 miles per hour, causing heat about half that of the

temperature of the sun--almost as hot as it is here today--and do all this, and do it right, and do it first

before this decade is out--then we must be bold.

I'm the one who is doing all the work, so we just want you to stay cool for a minute. [laughter]

However, I think we're going to do it, and I think that we must pay what needs to be paid. I don't

think we ought to waste any money, but I think we ought to do the job. And this will be done in the

decade of the Sixties. It may be done while some of you are still here at school at this college and

university. It will be done during the terms of office of some of the people who sit here on this

platform. But it will be done. And it will be done before the end of this decade.

And I am delighted that this university is playing a part in putting a man on the moon as part of a

great national effort of the United States of America.

Many years ago the great British explorer George Mallory, who was to die on Mount Everest, was

asked why did he want to climb it. He said, "Because it is there."

Well, space is there, and we're going to climb it, and the moon and the planets are there, and new

hopes for knowledge and peace are there. And, therefore, as we set sail we ask God's blessing on the

most hazardous and dangerous and greatest adventure on which man has ever embar ked.

# Harrow Former Mayor Councillor Suresh Krishna and Harrow Former Deputy Mayor Councillor Sasikala visit EP Academy

Harrow Former Mayor Councillor Suresh Krishna and Harrow Former Deputy Mayor Councillor Sasikala have visited our centre on Sunday 13th November. Councillor Suresh Krishna who is currently a mentor for Middlesex University UK students. He has delivered the key notes speech for the EP Academy students. The students have been advised on their higher education, career progression and further studies in the UK. It was a great opportunity for our EP Academy students to have this career advice and guidelines from an experienced person with a wise background. Furthermore, EP Academy has been working strongly with UK Universities for higher education for students and business developers.

Since 2014, EP Academy is the only CIMA approved and authorised tuition and exam centre for the North East in Sri Lanka. It is continuously serving students in Jaffna for CIMA studies and their exams. As they continuously develop, now EP Academy is catering for students in Aircraft Engineering, Degrees studies in abroad, Care giving programs, official UK work permit for nursing, carers and chefs and supportive studies such as IELTS exams, PTA English exams and interview preparations. Also EP Academy has taught Cloud computing (AWS and Microsoft Azure) with experienced lecturers within the industry from abroad. In the current demand of IELTS, we have a program during the daytime (Mon-Fri), evenings and weekends for students convenience.

EP Academy is conveniently located on Clock Tower Road which is within walking distance from Jaffna main bus station. EP Academy staffs and lecturers are friendly and approachable for students. We are one of the Pearson VUE exam centre. We have successfully delivering the computer base exams. Also every month, we have career development programs, free student visa advisory programs and health care and cate ring industry work permit seminars to support our community.





# கோட்டை இராசதானியின் ஆரம்பம்



இலங்கை இராசதானிகள் பட்டியலில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டைக்கு தனித்துவமான ஓர் இடம் உரித்தாகின்றது. மதம், கல்வி, அரசியல், கலாசாரம் மற்றும் சமூகம் போன்ற துறைகளில் தனித்துவமான பல மாற்றங்கள் நிகழ்ந்த இராசதானியாகவும் கோட்டை முக்கியத்துவம் பெறுகிறது. முக்கியமாக சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என வர்ணிக்கப்படுவதும் கோட்டை யுகமாகும்.

கோட்டை இராசதானியின் ஆரம்பம் பதினான்காம் நூற்றாண்டு எனக் குறிப்பிடப்படுகின்றது. அக்காலத்திலிருந்த கம்பளை அரசாட்சியில் அதிகார புரட்சியை ஏற்படுத்தி பேராதெனி பிரதேசத்தை ஆட்சிசெய்த மூன்றாம் விக்கிரமபாகு ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனை பதவியிலிருந்து வெளியேற்றி சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டான். மூன்றாம் விக்கிரமபாகு மன்னராக முடிசூடியதை அடுத்து அதுவரை கம்பளையை மையமாகக் கொண்டு ஆட்சிசெய்த நாலாம் புவனேகபாகு மன்னனினதும் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனினதும் அமைச்சராக செயலாற்றிய சேனாதிலங்கார செனவிரத் என்பவரை அப்பதவியிலிருந்து அகற்றி அப்பதவிக்கு றைகம பிரதேச ஆட்சியாளராகவிருந்த பிரபுராஜ என்ற பெயரில் அழைக்கப்பட்ட நிஸ்ஸங்க அழகக்கோணார எனும் நிஸ்ஸங்க அழகேஸ்வர நியமிக்கப்பட்டார்.

கோட்டை இராசதானியை ஆரம்பித்து அதை ஸ்ரீ ஜயவர்தனபுர என்ற பெயரில் அழைத்தது நிஸ்ஸங்க அழகேஸ்வரனே. றைகம பிரதேச ஆட்சியாளராகவும் பலம்வாய்ந்தவராகவிருந்தவர் அழகேஸ்வர என்ற மாபெரும் செல்வந்தரே. அவர் வணிக வம்சத்தை (வணிகர் குலத்தை) சேர்ந்தவர். செல்வத்தில் குபேரனாகவிருந்த அவருடைய அடுத்த எதிர்பார்ப்பு அதிகாரம் கொண்டவராக இருப்பதாகும். அதற்காக அவர் பின்பற்றிய செயல்முறை யாதெனில், அரச அதிகாரமுள்ள குடும்பங்களில் விவாக சம்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளுவதாகும். அதன் பிரகாரம் அழகேஸ்வரன் 3ஆம் விக்கிரமபாகு மன்னனின் சகோதரியை தமது மனைவியாக்கிக் கொண்டார்.

அக்காலத்தில் இலங்கையின் வடக்கில் அதாவது யாழ்ப்பாண குடாநாட்டில் ஆட்சியதிகாரம் கொண்டிருந்தவர் ஆரியசக்கரவர்த்தி என்ற தமிழராகும். அவர் வடக்கில் மாத்திரமன்றி கொழும்பு, சிலாபம், நீர்கொழும்பு, பாணந்துறை போன்ற படகுதுறைகளின் அதிகாரத்தையும் தன் வசம் வைத்திருந்தார். அவர் இந்தளவுக்கு அதிகாரம் உள்ளவராக இருப்பதற்கு பெரும்பாலான சிங்கள மன்னர்களின் செயற்பாடுகளும் பெரிதும் உதவியுள்ளது. 5ஆம் பராக்கிரமபாகு மன்னனை பதவியிலிருந்து வெளியேற்றி 3ஆம் விக்கிரமபாகு மன்னன் சிம்மாசனத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஆரியச்சக்ரவர்த்தியின் உதவியும் அவருடைய ஆளணியும் கிடைத்தது என்பது இங்கு எடுத்துக்காட்டக்கூடிய உதாரணமாகும். அதற்கு நன்றிக்கடனாக மாத்தளை தும்பறை, சிதுறுவான ஆகிய பிரதேசங்களில் வரி அறவிடும் அதிகாரம் ஆரியச்சக்கரவர்த்திக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவர் செல்வந்தராகவும் அதிகாரம் மிக்கவராகவும் இருந்தார்.

ஆரியச்சக்ரவர்த்தியின் இந்த எழுச்சி யைப் பொறுக்காத அழகேஸ்வரன் எப்படியாவது ஆரியச்சக்ரவர்த்தியின் அதிகாரத்தை அழிக்கக்கூடியவழிபற்றி சிந்திக்கத் தொடங்கினான். ஒருநாள் அவன் கம்பளையிலிருந்து தனது சொந்த ஊரான றைகம நோக்கி போய்க்கொண்டிருந்தான். அது களனி ஆற்றுக்கு தெற்கில் மஹதரகம எனும் தாருகம பிரதேசத்தின் ஊடாக சென்றுகொண்டிருந்தான். தாருகம மூன்று பக்கத்திலும் நீர் சூழ்ந்திருந்த கடும் பாதுகாப்புள்ள திசையாகும். அதன் இருபக்கங்களில் கொலொன்னா ஓயவும் ஒரு பக்கம் தியவன்னா ஓயவும் சூழ்ந்திருந்தது. அதைத் தவிர இந்த பிரதேசம் சதுப்புநிலங்களையும் கொண்டிருந்தது. இதன் காரணமாக தாருகமவை அடைவது மிகக் கஷ்ட மாக இருந்தது. இந்த இயற்கை அரணை தனது கோட்டை யாக்கிக்கொள்ளுவதற்கு அழகேஸ்வரனுக்கு போதுமானதாக இருந்தது. மேலும் தாருகம பொருளாதார மையமாக இருந்த கொழும்பு நகரத்திலிருந்து 06 மைல் தூரத்தில் அமைந்திருந்தது. இந்த நெருக்கம் கொழும்பிலும் அதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டிருந்த ஆரியச்சக்கரவர்த்தியின் அதிகாரத்தை பலவீனப்படுத்த அழகேஸ்வரனுக்கு பெரிதும் உதவியது. மேலும் முன்னர் கூறிய தைப்போன்று கொழும்பு சிலாபம், நீர்கொழும்பு, பாணந்துறை ஆகிய படகுதுறைகளுக்கு ஆரியச்சக்கரவர்த்தியின்வர்த்தக படகுகள் அடிக்கடி வந்துபோயின. தண்ணீரில் சென்று அவற்றை அழிப்பதற்கு அழகேஸ்வரன் குறி பார்த்துக்கொண்டிருந்தான். இதன்போது தாக்கும் படகுகளை அந்த இடங்களுக்கு அனுப்பி தாக்குதல் நடத்தி உடனே அவற்றை திருப்பி அழைப்பித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கும் வலுவான கடற்படை இருக்க வேண்டும். அதற்கு தாருகமவில் அமைந்திருந்த நீர்சார்ந்த சூழல் அவனுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

இந்த அனைத்து காரணிகளையும் கவனத்திற் கொண்ட அழகேஸ்வரன் ஆரியச்சக்ரவர்த்தியின் அதிகாரத்தை பலவீனப்படுத்துவதற்கு ஒரு கோட்டையை அமைத்துக்கொள்ள தாருகம என்றும் கோட்டை என்றும் ஜயவடன பூமி என்றும் அழைக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தன புரவை தேர்ந்தெடுத்தான்.

அழகேஸ்வரனின் வருகையால் ஸ்ரீ ஜயவர்தனபுர இராசதானியாகியது. அரசியல், சமூகம், கல்வி, இலக்கியம் என்ற வகையில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒரு காலத்தில் நாட்டின் அரசியல் பயணத்தின் தலைவிதியைத் தீர்மானித்த மிக முக்கியம்வாய்ந்த பல சம்பவங்களுக்கு பின்னணியாக அமைந்த இராஜதானியாக இது இருந்தது.

## கல்விக்கதிர்



- அகரன் -

## இயற்கை வளங்கள்



இயற்கை வளங்கள் (natural resources), அல்லது பொருளாதார ரீதியில் நிலம் மற்றும் மூலப்பொருள் அல்லது கச்சாப் பொருள்கள் எனப்படுபவை ஒப்பீட்டளவில் மனிதத் தலையீடுகளின்றித் தன் இயல்பு நிலையில் சூழல் தொகுதிகளில் காணப்படும் பொருள்கள் ஆகும். இயற்கை வளங்கள் சுற்றுச்சூழலிலிருந்து தருவிக்கப்படுபவை. இவற்றில் பெரும்பான்மையானவை நம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவையாகவும் தேவைகளுக்குப் பயன்படக்கூடியவைகளாகவும் அமைகின்றன. இயற்கையில் காணப்படுவதும் மனித குலத்திற்குப் பயன்படுவதுமான கூறுகள் இயற்கை வளங்கள் எனப்படுகின்றன.

இயற்கை வளங்களின் பண்புகள் அவைகளைச் சுற்றியுள்ள மாறுபட்ட சிற்றுயிர் முதல் மனிதன் வரையான உயிரினங்கள் உள்ள உலகம் மற்றும் அவைகளின் சுற்றுப்புற சூழ்நிலை பண்புகளின் வேறுபாட்டின் அடிப்படையில் மாறுகின்றன.

இயற்கை வளங்கள் பல்வேறு அடிப்படைகளில் பாகுபடுத்தப்படுகின்றன. அவற்றின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உயிருள்ளவை: உயிர்க் கோளத்திலிருந்து வருவிக்கப்படுகின்றவை இதிலடங்கும். உதாரணமாக காடு மற்றும் காடு சார்ந்த பொருள்கள், விலங்குகள், உயிரினங்களின் சேதமாக்கலால் விளையும் பெற்றோலியப் பொருள்கள் போன்றவை ஆகும்.

உயிரற்றவை: உயிரற்ற கூறுகளான நீர் நிலம் வளி என்பவற்றிலிருந்து வருவிக்கப்படுபவை.

அவற்றின் உருவாக்கப் படிகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன.

வாய்ப்புள்ள வளங்கள்: எதிர்காலத்தில் பயன்படக்கூடிய வாய்ப்புள்ளதாக விருத்திபெறக்கூடிய வளங்கள் வாய்ப்புள்ள வளங்கள் எனப்படுகின்றன. உதாரணமாக இந்தியாவில் உள்ள பெற்றோலியப் பொருள்கள்.

உண்மை வளங்கள்: தற்போது தரமும் அளவும் அறியப்பட்ட, பயன்பாட்டிலுள்ள வளத்தின் அளவு இது வாகும் அவற்றின் புதுப்பிக்கப்படும் தன்மையின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படும்:

புதுப்பிக்கக்கூடிய வளங்கள்: பயன்படுத்தப்படுதல் காரணமாக குறைவுபடுதலுக்குட்பட்டாலும் உடனடியாக அல்லது குறுகிய காலப்பகுதியில் மீளப் புதுப்பிக்கப்படக்கூடிய வளங்கள் இவை ஆகும்.

உதாரணம்: வளி, காற்று, சூரிய ஒளி மற்றும் நீர். காட்டு வளமும் ஒப்பீட்டு ரீதியில் ஒரு மீளப்புதுப்பிக்கக் கூடிய வளமாகும்.

புதுப்பிக்கமுடியாத வளங்கள்: நீண்ட புவியியல் காலத்தில் உருவாக்கம் கொள்ளுகின்ற வளங்கள் இவை ஆகும். அழிக்கப்படுமாயின் இலகுவில் மீளப் புதுப்பிக்கப்பட மாட்டாது.

உதாரணம்: உயிர்ச் சுவட்டு எரிபொருட்கள்(Fossil Fuel) கனிம வளங்கள்(Minerals)

## நிதானமிழக்காமல் அமைதியாக முடிவெடுங்கள்

1.எதிரி இல்லையென்றால் சண்டை இல்லை. சண்டை இல்லையென்றால் வெற்றி இல்லை. வெற்றி இல்லையென்றால் மகுடம் இல்லை.

2. ஆரோக்கியத்தை பெற்றுள்ள ஒருவர் நம்பிக்கையை பெற்றுள்ளார். நம்பிக்கையைப் பெற்றுள்ள ஒருவர் எல்லாவற்றையும் பெற்றுள்ளார்.

3. தொலைவில் இருப்பதைப் பார்த்துத் தயங்குவதில் பயன் எதுவுமே இல்லை. அருகில் இருப்பதைச் செய்து முடிப்பதே தலையாய பணி.

4. நல்லவர்கள் செய்யும் உதவி, பூமிக்கடியில் இருக்கும் நீர்போல. தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாது. ஆனால், பூமியின் மேற்பரப்பில் பயிர்பச்சைகளை செழுமையாக வளரச்செய்யும்.

5. அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு எப்படி ஏற்படுகிறது என்பது முக்கியமல்ல. அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதே முக்கியம்.

6. நீங்கள் யார் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா? கேட்பதை விட்டுவிட்டு செயல்படுங்கள். செயல்பாடு ஒன்றே உங்களை வரையறுக்கும்.

7. தனது இலக்கினை அடைவதற்கான சரியான அணுகுமுறை கொண்ட ஒருவனை எதுவும் தடுத்து நிறுத்த முடியாது. தவறான அணுகுமுறை கொண்ட ஒருவனுக்கு இந்த பூமியில் எதுவும் உதவ முடியாது.


8. இரண்டு வார்த்தைகளில் சொல்லவேண்டிய விடயத்தை ஒரே வார்த்தையில் சொல்ல முடிந்தால் அதுதான் விலைமதிக்க முடியாத திறமை.

9. நெருக்கடி நிலையிலும் நிதானமிழக்காமல் அமைதியாக முடிவெடுப்பது, உற்சாகமான சூழ்நிலையில் சமநிலை இழக்காமல் இருப்பது, யாரையும் திருப்திப்படுத்த தனக்கு விருப்பமில்லாத செயல்களில் ஈடுபடாமலிருப்பது இவையே உண்மையான தலைவனின் குணாதிசயங்கள்.

10. மின்மினிப்பூச்சி பறக்கும்போதுதான் பளபளக்கிறது. மனிதன் சுறுசுறுப்போடு இயங்கும்போது தான் பிரகாசிக்கிறான்.

# கோவலன் மாதவி காதல்

## இலக்கிய நயம்



இளங்கோவடிகள் அரச குடும்ப வாழ்வை அறிந்தவர். துறவறத்தில் நின்றவர். அறநெறியை வற்புறுத்துவதில் ஆர்வம் மிக்கவர். தாம் சைன ராயினும் சமயப் பொதுநோக்கு வாய்ந்தவர். தாம் சேரநாட்டார் ஆயினும் சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றையும் இணைத்து தமிழ் நாடு என நோக்கும் ஒருமை நோக்கம் உடையவர்.

இவை போலவே, அவருக்கு உள்ள மற்றொரு சிறப்பு, அவருடைய கலை யுள்ளம் ஆகும். அவருடைய காப்பியத்தில் நாட்டியம், இசை ஆகிய இரு கலைகளை யும் பற்றி மிக விரிவாக எடுத்துரைத்த கார ணத்தால் மட்டும் அவருடைய கலையுள்ளம் விளங்கவில்லை. காப்பியத்தில் வருண னைகளையும் உணர்ச்சிகளையும் இணை இணையாகவும் முரணாகவும் நயமுற அமைத்துள்ள அமைப்பும் அவருடைய கலை யுள்ளத்தைத் தெளிவாக விளக்குகின்றது.

கண்ணகியும் கோவலனும் தொடக்கத்தில் நடத்தும் இன்ப வாழ்க்கையின் போது தென் றலும் வண்டும் வருணிக்கப்படுகின்றன.

கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்த பின், மறுபடியும் தென்றலும் வண்டும் வரு ணிக்கப்படுகின்றன. அங்கு வருணனை வேறுபடுகின்றது. அதன் பயனும் வேறாக உள்ளது. அந்தப் பிரிவின் போது, மகளிர் இரு சாராரின் கண்களில் இரு வகைக் கண் ணீரைக் காட்டுகிறார். கோவலனோடு மகிழும் மாதவியின் கண்களிலும் கணவரைப் பிரி யாத மற்ற மகளிரின் கண்களிலும் இன்பக் கண்ணீரையும், கண்ணகியின் கண்களி லும் கணவரைப் பிரிந்த மற்ற மகளிரின் கண் களிலும் துன்பக் கண்ணீரையும் முரண்படக் காட்டுகிறார்.

கோவலனுக்குத் திருமணமான பிறகு நிலா முற்றத்தில் கண்ணகியோடு இன்பமாக வாழும் போது குளிர்ந்த நிலவைக் காண்கிறோம். பிறகு இருவரும் மதுரைக்குச் செல்லும் போது கடுங் கோடையில் அவர்களின் துன்பத்தைத் தணிக்க முயலும் நிலவைக் காண்கிறோம். கோவலன் கண் ணகியை புகழும் பாராட்டு மொழிகளை இரண்டு இடங்களில் கேட்கிறோம். திருமணத்திற்குப் பிறகு புதிய காதல் வெறியில் எழும் பாராட்டு மொழிகள் முதலில் கேட்பவை. எல்லாம் அவளுடைய உடலின் இளமையும் அழகும் பற்றியவை. இரண்டாவதாகக் கேட்கும் பாராட்டும் மொழிகள் அவனுடைய வாழ்வின் கடைசி நாளில் கொலை செய்யப்படுவதற்கு முன் அவன் கூறியவை. அவை எல்லாம் கண்ணகியின் உயர்ந்த பண்புகளை நினைந்து உருகிக் கூறியவை.

மாதவி கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் எழு தினாள். முதலில் கோவலன் தனக்கு உரியவனாகத் தன்னோடு மகிழ்ந்திருந்தது பிரிந்த அன்று எழுதி யது. இன்னும் அவன் தனக்கு உரியவனே என்ற நம்பிக்கையால், விரைவில் திரும்பி வருமாறு காதல் குறிப்போடு தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்த பித்திகை அரும்பால் எழுதிய மலர்ச்செண் டுக் கடிதம்.

அடுத்தது, இனி அவன் தன்னிடம் திரும்பி வர மாட்டான் என்று நம்பிக்கை இழுந்து வணக்கத்தோடு எழுதியது. முன்னத்தில் உள்ளவை இன்பமான காதல் மொழிகள். பின்னத்தில் உள்ளவை பணிவான தூய சொற்கள்.

## கலைக் கதிர்



# மாயம் செய்யும் கவிதைகள்




கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலை சொல்லிய முதல் நாவலான வீணையடி நீ எனக்கு என்ற நாவலை எழுதிய வி. மைக்கல் கொலினின் ஐந்தாவது கவிதை நூல்தான் என் இனிய பட்டாம்பூச்சிக்கு என்னும் நூல். மகுடம் பதிப்பகத்தின் அறுபதாவது வெளியீடான இந் நூல் காதல் கவிதைகளின் பிம்பமாக காதலின் ஒவ் வொரு அசைவையும், அழகையும் வெளிப்படுத்தி நிற் கின்றது.

ஆனால் அந்த காதல் கவிதைகளின் ஊடாக அவர் தொன்மங்களையும், வரலாற்றையும், தமிழ் மக்களின், தமிழ் பிரதேசங்களின் இன்றைய நிலையையும், மிக லாவகமாக வெளிப்படுத்தி நிற்கின்றார்.

கவிதைகள் மாயம் செய்யும் என்பதற்கு கவிஞரின் பல கவிதைகள் சாட்சிகளாகின்றன.

காதல் நினைவுகளை மனதில் சேமித்து வைத்தி ருப்பதனை கற்பனையின் வழியாக கவிஞர் சொல்லும் விதம் ஆச்சரியப்பட வைக்கின்றது. அதாவது,

**என்றோ பெய்த மழை நீரை**
**சேமித்து வைக்கும்**
**நீரேந்தும் பிரதேசம் போல்**
**உன் நினைவென்னும்**
**மழை நீரை**
**என் இதயமெங்கும்**
**சேமித்து வைத்துள்ளேன்**

என நீரேந்தும் பிரதேசத்தினை தனது இதயத்திற்கு ஒப்பிடுகின்றார் கவிஞர்.

ஆம் மழைக்காலத்தில் இந்த நீரேந்தும் பிரதேசங் கள் தண்ணீரை சேமித்துக் கொள்கின்றன. அதன் பின் கோடை காலங்களில் குறித்த பகுதிகளில் உள்ள கிண றுகளில் நீர் தொடர்ச்சியாக ஊறுவதற்கு இந்த நீரேந் தும் பிரதேசங்களே காரணமாகின்றன.

அதே போல் கவிஞரின் இதயமும் காதலியின் நினை வென்னும் மழைநீரை சேமித்து வைப்பது அபார கற் பனை.

ஆதாம், ஏவாள் கதை, விக்கிரமாதித்தன் கதை என புராணக்கதைகளை மையமாகக் கொண்டு கவிதை கள் எழுதியுள்ள கவிஞரின் கற்பனையும் பாராட்டும் விதமாக உள்ளது. உதாரணமாக விக்கிரமாதித்தன் வேதாளத்தின் கதையை கருவாகக் கொண்டு தனது காதல் கதையை எழுதும் கவிஞரின் வரிகள்

**உன் உடலெங்கும் ஆடைகளாய்**
**தொங்கிக் கொண்டிருக்கிறது**
**என் கவிதைகள்**

என கவிதைகளின் இருப்பை எடுத்துரைக்கின்றது.

அதுமட்டுமன்றி தனது காதல் நினைவுகள் நிகழ்ந்த இடங்களை மையப்படுத்தி கவிதைகள் எழுதியுள்ளமை அந்த இடம் சார்ந்த எண்ணவெளிப்பாட்டினையும், காதல் நினைவுகளையும் வெளிப்படுத்துகின்றது.

இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலே சென்று இயற்கை அம்சங்களை முன்னிலைப்படுத்தி தனது காதல் நினைவுகளை அவற்றோடு ஒப்பிட்டு வடிவமைத்துள்ள கவிஞரின் கற்பனையோட்டம் சிறப்பானதாகும். உதார ணமாக நதி, பள்ளத்தாக்கு, தென்றல், மழை, காற்று போன்ற இயற்கை அம்சங்களை முன்னிலைப்படுத்தி கவிதை எழுதியுள்ளதைக் குறிப்பிடலாம்.

**இருவரும் இணைந்து**
**இந்த உலகத்தில்**
**புதியதொரு**
**மதத்தை உருவாக்குவோம்**
**ஆம்**
**காதல் மதம்**
**கடவுளாக**
**நாங்கள்!**

என்ற வரிகளினூடாக காதலர்கள் இருவரும் இணைந்து புதிய வகையான காதல் மதத்தை உருவாக் குவோம் எனவும், அம்மதத்திற்கு கடவுளாக காதலர் களான நாம் இருவரும் இருப்போம் எனவும் எடுத்து ரைப்பது காதல் சார்ந்த நினைவுகளை அழகாக வெளிப் படுத்துகின்றன. இதைத்தவிர அணிந்துரையில் தமிழ கக் கவிஞர் விக்ர்தாஸ் என்பவர் கூறியதுபோல் வரலாறு, இயற்கை, ஆன்மீகம், நம்பிக்கை, அழகு என அனைத் தையும் கற்பனையின் வழியாக பேசியுள்ளார். இலகு வான எளிமையான நடையில் எழுதப்பட்ட இக்கவிதை நூல் புதுவித உத்தியைக் கையாண்டு எழுதப்பட்டது போன்ற உணர்வினை ஏற்படுத்துகின்றது. காதல் மனைவியின் பிறந்தநாளை முன்னிட்டு நாற்பத்தி நான்கு நாட்கள் தன்னுடைய முகநூலில் பதிவிட்ட கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்த இந்நூலின் பிற்பகுதியில் கவிதைகள் குறித்து இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள் எனப் பலர் கவிதைகள் வெளிவந்த காலங்களில் எழுதிய குறிப்பு கள் இணைக்கப்பட்டிருப்பது புத்தகத்திலுள்ள கவிதை களின் மீதான விருப்பினை அதிகரிக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும். காதல் நினைவுகளை வரிக ளால் சுமந்து வரும் சிறந்த நூல் என் இனிய பட்டாம்பூச் சிக்கு.

**அஷ்வினி வையந்தி**
**(கிழக்குப் பல்கலைக்கழகம்)**

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# “எனது கணவரின் ஊக்கத்திலே இக்கலையை தொழிலாக முன்னெடுத்தேன்”

## நேர்காணல்

**KIRU AARI CREATION உரிமையாளர் பத்மதீபன் அஸ்வினி உடனான நேர்காணல்.**

**நேர்கண்டவர் - திருமலை தட்சா**



**01. உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் திருமதி. பத்மதீபன் அஸ்வினி. நான் திருகோணமலை மாவட்டத்தில் செல்வநாயகபுரம் எனும் கிராமத்தில் வசித்து வருகின்றேன். நான் Kiru aari creatioஐ எனும் தனியார் நிறுவனம் ஒன்றினை நடாத்தி வருகின்றேன்.

**02. இத் துறையை நீங்கள் தேர்ந்தெடுத்தமைக்கான ஆர்வமும் குறித்தும், அதனூடான பயணம் குறித்தும்?**

இத்துறையினை ஓர் தொழிலாக செய்ய வேண்டுமென்ற நோக்கில் தெரிவு செய்யவில்லை. எனது திருமணத்திற்கு நானே எனது ஆடையினை வடிவமைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் இக்கலையினை கற்கத் தொடங்கினேன். அதன் பின்னர் எனது கணவரின் ஊக்கத்துடனும், முயற்சியுடனும் இக் கலையினை ஓர் தொழிலாக Kiru aari creation எனும் பெயரில் முன்னெடுத்து இன்று வரை ஆர்வத்துடன் பயணித்து வருகின்றேன்.

**03. இத்துறையில் எவ்வாறான வடிவமைப்பு வேலைப்பாடுகளை மேற்கொண்டு வருகிறீர்கள்?**



இத்துறையில் ஆரிவேர்க் என்றாலே சாரி பிளவுஸ் தான் என்று எல்லோரும் சொல்வது. ஆனால் நான் Saree blouse, salwar top, saree name work, tassels making, pattu pavadai, frock, habaya, scarves, hip belt, chockets, lehenga என பெண்களின் பல ஆடைகளுக்கு வடிவமைத்து கொடுத்து வருகின்றேன்.

**04. இத்துறையில் நீங்கள் மேற்கொண்ட வேலைப்பாட்டில் உங்கள் திறமைக்கு சவாலாக அமைந்த விடயம் பற்றி?**

திறமைக்கு சவாலாக அமைந்தது என்றால், இத்துறையிலான அதிக போட்டித்தன்மையே காரணம். குறைந்த கட்டணத்திலும் நிறைய ஓடர்களை செய்வதும், குறைவான தொகையில் அதிக மாணவர்களுக்கு பயிற்சியளித்து வருவதையும் பார்த்து சிலரின் பார்வைகள் போட்டிகள் நிறைந்த சூழலாகவே காணப்பட்டது. எனினும் இவற்றையெல்லாம் கடந்து எனது கலையினை மனத்திருப்தியுடன் செய்து வருகின்றேன் எனலாம்.

**05. ஒரு வேலைப்பாட்டினை மேற்கொள்ளும் போது எவ்வகை விடயங்களை கைக்கொண்டு வருகின்றீர்கள்?**

வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப வடிவமைப்பதோடு அவர்கள் கேட்கும் தினத்திற்கு முன்பதாகவே கையளித்து அவர்களின் திருப்தியை பெறும் நோக்குடனே எனது வேலைப்பாட்டினை மேற்கொண்டு வருகின்றேன். அத்துடன் என்னிடம் பயிற்சி பெற்று வரும் மாணவர்களிடத்தில் ஒரு நண்பராக பழகி அவரவருக்கு ஏற்ற விதத்திலே கற்றுக் கொடுத்து வருகிறேன்.

**06. உங்களது வேலைப்பாட்டின் மூலமாக வாடிக்கையாளர்களின் திருப்தியும், வரவேற்பும் எவ்வாறு உள்ளது?**

உண்மையிலேயே எனக்கு திருகோணமலை மாவட்டம் மட்டுமன்றி இலங்கையில் பல மாவட்டங்களில் அதிக வரவேற்புள்ளது. Online update பண்ணுவதன் மூலம் பல இடங்களிலும் அதிகமான வாடிக்கையாளர்கள் உள்ளனர். பல மாவட்டங்களுக்கும் சென்று ஆரி வேர்க் வகுப்புக்களை நடாத்தி வருவதோடு மாணவர்களுடன் ஒரு நண்பராக பழகுவதன் மூலம் பலரும் விரும்பி என்னிடம் கற்பதற்கு தேடி வருகின்றனர்.

**07. இத் துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து?**

இத்துறை ரீதியான போட்டித் தன்மையே மிகப் பெரும் சவாலாகும். என்னிடம் திறமையும், முயற்சியும், நம்பிக்கையும் அத்துடன் எனது கணவரின் பக்கபலமும் உள்ளது. எனக்கு அதிகளவிலான பணம் முக்கியமில்லை. எனக்கும், எனது நிறுவனத்திற்குமான நல்ல பெயர் கிடைக்க வேண்டும். அதற்காக எவ்வளவு போட்டி வந்தாலும் அதனை தகர்த்தெறிந்து வெற்றிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டேயிருப்பேன்.

**08. இதன் மூலமாக உங்களுக்கு கிடைக்கும் வருமானம் திருப்தியளிக்கின்றதா?**

ஆம் திருப்தியளிக்கின்றது. எனது உழைப்பிற்கேற்ற வருமானத்தை மனத் திருப்தியுடன் பெற முடிகின்றது.

**09. உங்களது கலைத்துறையினை பயிலும் மாணவர்கள் குறித்தும், அவர்களுக்கான உங்களது பயிற்றுவிப்பு, வாய்ப்புகள் குறித்தும்?**

கை விரலில் ஐந்தும் ஒரே போல் இருக்காது. அதே போலத்தான் மாணவர்களும் ஒரே மாதிரி இல்லை. ஒரு சிலர் கற்றுக் கொடுப்பதை உடனே விளங்கிக் கொள்வர். சிலர் விளங்கிக் கொள்வது கஷ்டம். அதிலும் இன்னொரு சிலர் முதல் நாள் வந்து கற்பதற்கு முடியாது இருக்கின்றதென்று நின்று விடுவார்கள். நான் மாணவர்களிடத்தில் சொல்வது கற்பதற்கு முடியாதென்று எதுவுமில்லை. நாம் ஒரு கலையைத் தெரிவு செய்து கற்க நினைத்து விட்டால் அதில் கஷ்டப்பட்டு முழுமையான முயற்சி செய்து தான் கற்க வேண்டும் என அடிக்கடி மாணவரிடத்தே கூறி ஊக்கப்படுத்தி வருகிறேன். மேலும் என்னிடம் கற்று முடித்த சில மாணவர்களுக்கு எனது நிறுவனத்திலே வேலை வாய்ப்பை வழங்கியுள்ளேன். அத்துடன் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் நடைபெறும் எனது வகுப்புகளுக்கு என்னிடம் கற்ற மாணவர்களை அனுப்பி பயிற்றுவித்தும் வருகின்றேன்.

**10. திருகோணமலை மாவட்டத்தில் உங்கள் கலைத்திறமைக்கான அடையாளமும், அங்கீகாரமும் எவ்வாறு உள்ளது?**

எனக்கும், எனது நிறுவனத்திற்குமான அடையாளம், அங்கீகாரம் திருகோணமலை மாவட்டம் மட்டுமன்றி இலங்கையின் பல இடங்களிலும் நிறைந்துள்ளது.

**11. இத்துறை தவிர, வேறு துறைகளில் நாட்டம், சமூக சேவைகள் குறித்து?**

இத் துறைத் தவிர, Kiru mehndi, kiru cake craft, Kiru tailoring என மூன்று துறைகளை ஆரம்பித்து உள்ளேன். என்னிடம் பயின்ற மாணவர்களின் மேலதிக திறமைகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவித்து முன்னேற்றும் வகையில் முன்னெடுத்து வருகிறேன்.

**12. இக் கலைத்துறையில் கிடைத்த விருதுகள் குறித்து?**

IBC நிறுவனத்தினால் Best women achiever விருது, women Icon international இனால் Best women performer விருது, அருந்ததி நிறுவனத்தினால் Best women விருது ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளேன்.

**13. இத்துறையில் உங்களது இலக்கு எதுவாகவுள்ளது?**

எனக்கும், எனது நிறுவனத்திற்கும் நல்ல பெயர் வருவதோடு அப் பெயர் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே எனது இலக்காகும்.

**14. நிறைவாக, இத்துறையைத் தேர்ந்தெடுத்து கற்பவர்களுக்கு நீங்கள் கூற விரும்புபவை?**

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்கள் இத் துறையைத் தெரிவு செய்து கற்றுத் தொழிலாக முன்னெடுத்து அதிக வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். குறைந்த முதலீட்டின் மூலம் அதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் அதே நேரம்,! பொறுமையைக் கடைப்பிடித்து நேர்த்தியாக வடிவமைத்து இத் தொழிலை முன்னெடுக்கும் பட்சத்தில் அதிகளவிலான வாடிக்கையாளர்களை பெற்றுக் கொண்டு மனத் திருப்தியுடன் உழைத்து சமுதாயத்தில் சிறந்த பெயருடனும், மதிப்புடனும் திகழலாம் என்பதே எனது கருத்தாகும்.

நன்றி!






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




# சமயோசித யுக்தியால் உயிர் தப்பிய நாய்

காட்டுநாய், சிறுத்தை, குரங்கு என்பன ஒரு காட்டில் சுற்றித் திரிந்து கொண்டு இருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப் புலி தன்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்ததை அந்த காட்டுநாய் பார்த்தது.

காட்டு நாயை பிடித்து தின்ன வேண்டும் என்பதுதான் சிறுத்தைப்புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பி செல்வது என்பது காட்டு நாயின் கவலை.

ஓடிச்செல்வதால் பயனில்லை. ஏனென்றால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப்புலியின் அளவுக்கு காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது.

எனவே காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்க தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றை பார்த்தும் உடனே அந்த காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப்புலியின் பக்கம் தன் முதுகை திருப்பிக்கொண்டு கீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பது போல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப் புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்கு தயாரானபோது காட்டுநாய் உரத்த குரலில் சொன்னது.

"இப்போது நான் தின்று முடித்த சிறுத்தைப்புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப்புலி கிடைக்குமா? என்று தேடிபார்க்க வேண்டும்" என்றது.

இதைக் கேட்டதும் பயந்து போய் சிறுத்தைப்புலி அப்படியே ஸ்தம்பித்து சிலைபோல் நின்று விட்டது.

இந்த காட்டு நாய் சிறுத்தைப்புலிகளையே கொன்று தின்று விடுகிறதே. அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். இதனிடம் அகப்படாமல் தப்பி சென்றுவிட வேண்டும் என்று நினைத்து ஓசைப்படாமல் பின்னோக்கி சென்று அந்த சிறுத்தைப்புலி புதருக்குள் மறைந்துவிட்டது.

அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது. தனக்கு தெரிந்த தகவலை சிறுத்தைப்புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப்புலியுடன் பேரம் பேசி தனக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது.

எனவே சிறுத்தைப்புலியை பின்தொடர்ந்து அந்தக்குரங்கு வேகமாக ஓடிச் சென்றது. காட்டு நாயும் இதை கவனித்தது. ஏதோ சதி நடக்கிறது என்பதை புரிந்துகொண்டது.

குரங்கு, சிறுத்தைப்புலியிடம் சென்று காட்டு நாய், சிறுத்தைப்புலியை எப்படி ஏமாற்றியது என்ற முழு விவரத்தையும் சொன்னது. சிறுத்தைப்புலிக்கு தாங்க முடியாத கோபமும், ஆத்திரமும் வந்தது.

அந்த காட்டு நாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா? அதற்கு மறக்க முடியாத பாடத்தை புகட்டுகிறேன்.

"இந்த காட்டில் யார் யாரை கொன்று தின்பார்கள் என்பதை காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு, "குரங்கே வா. என் முதுகில் ஏறி உட்கார். இரண்டு பேரும் அந்த காட்டு நாயை பிடிக்கலாம்" என்றது. குரங்கு, சிறுத்தைப்புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது.

இரண்டும் நாயை நோக்கி சென்றன. சிறுத்தையும், குரங்கும் சேர்ந்து வருவதை காட்டு நாய் பார்த்தது. இந்த திருட்டு குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டதே இப்போது என்ன செய்வது? என்று அந்த காட்டு நாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற்காக அந்த காட்டு நாய் பயந்து ஓடவில்லை.

அந்த சிறுத்தையையும், குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவைகளுக்கு தன் முதுகை காட்டிக்கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்த காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது.

"அந்த போக்கிரி குரங்கு எங்கேபோய் தொலைந்தது. அதனை நம்பவே முடியாது. நான் இன்னொரு சிறுத்தைப் புலியை சாப்பிடுவதற்கு பிடித்துக்கொண்டுவா என்று சொல்லி அனுப்பி அரை மணிநேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்த குரங்கை காணோமே?" என்றது.

காட்டு நாய் சொன்னதை கேட்ட சிறுத்தைப்புலி தன் கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது. அதனை கடித்துக் குதறி கொன்று தின்றுவிட்டது.

**நீதி: வாழ்க்கையில் பல பிரச்சினைகள் வரலாம். ஆபத்துக்கள் வரலாம். பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்தியுங்கள். வெல்லலாம்.**

# நற்சிந்தனை

**1. ஆசைக்கு ஒரு உச்ச வரம்பை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். இதுவே நிம்மதிக்கான வழிமுறை.**

**2. எப்போதும் உற்சாகத்துடன் இரு. அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடு. இயன்ற அளவில் பிறருக்கு உதவி செய்.**

**3. மற்றவரைப் பற்றி தவறாகப் பேச வேண்டாம். அவர்களிடமுள்ள நல்ல பண்புகளை மட்டும் பார்க்கப் பழகுங்கள்.**

**4. பற்களுக்கு இடையே நாக்கு கடிபடாமல் தப்புவது போல, தீயவர்களுடன் இருக்க நேர்ந்தாலும் ஒதுங்கி நில்லுங்கள்.**

**5. உலகம் நமக்கு நிரந்தரமானது அல்ல. வாழ்க்கைப் பயணம் முடியும் வரை தான் இங்கு நமக்கு வேலை.**

**6. உழைப்பினால் கிடைக்கும் பணமே சிறந்தது. அதில் உண்டாகும் மகிழ்ச்சியை வர்ணிக்க வார்த்தையில்லை.**

**7. எல்லாம் தெரிந்தவர் என்று ஒருவர் உலகில் யாரும் கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை இருக்கவே செய்யும்.**

**8. உங்களை நீங்களே புகழ்ந்து கொள்ள வேண்டாம்.**


**9. குளிர்ச்சி மிக்க இடத்தில் உடல் மட்டுமே குளிர்ச்சி அடையும். நேர்மையால் மட்டுமே உள்ளம் குளிர்ச்சி பெறும்.**

**10. வெறும் பேச்சால் பயனில்லை. செயல் மூலமாக மற்றவருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.**

**11. பிறந்த நாட்டையும், பெற்ற தாயையும் நேசியுங்கள். அவர்களுக்காகத் தியாகமும் செய்யுங்கள்.**

**12. கடமையே கடவுள். அதற்காகப் பணியாற்றுவதே வழிபாடு. வாழ்வில் ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் கடமையாற்றுங்கள்.**

# தோப்பு



எல்லாம் மாமரங்கள் – அதில்
எங்கும் மாமரங்கள்
இல்லை மற்ற மரங்கள்
இதுதான் மாந் தோப்பு.

எல்லாம் தென்னை மரங்கள் – அதில்
எங்கும் தென்னை மரங்கள்
இல்லை மற்ற மரங்கள்
இதுதான் தென்னந் தோப்பு.

எல்லாம் கமுக மரங்கள்
எங்கும் கமுக மரங்கள்
இல்லை மற்ற மரங்கள்
இது கமுகந் தோப்பு.



எல்லாம் புளிய மரங்கள்
எங்கும் புளிய மரங்கள்
இல்லை மற்ற மரங்கள்
இது புளியந் தோப்பு.

# தவளையாரே

**தத்தித் தத்தி ஓடிவரும்
தவளையாரே -கொஞ்சம்
தயவு செய்து நின்றிடுவீர்
தவளையாரே**

**சுத்தமாகத் தினம்குளித்தும்
தவளையாரே - உடல்
சொறி சொறியாய் இருப்பதேனோ
தவளையாரே?**

**பூச்சி புழு பிடித்துவரும்
தவளையாரே - உம்மைப்
பிடித்துப் பாம்பு தின்பதேனோ
தவளையாரே?**

**மாரிக் காலம் வந்து விட்டால்
தவளையாரே - ஏனோ
வறட்டுக் கத்தல் கத்துகிறீர்
தவளையாரே?**

**நீருக்குள்ளே நீச்சலடிக்கும்
தவளையாரே - இங்கே
நிலத்தில் வந்து குதிப்பதேனோ
தவளையாரே?**

**ஊமை போல இருப்ப தேனோ
தவளையாரே? - சும்மா
உருண்டைக் கண்ணால் பார்ப்பதேனோ
தவளையாரே?**

# இன்று கிறிஸ்து அரசர் பெருவிழா

– அருள்திரு யேசு கருணாநிதி –
(மதுரை உயர்மறைமாவட்டம்)

## நினைவிற்கொள்ளும் அரசர்!

ஒரு சாதாரண கதையோடு தொடங்குவோம்.

சிறுவன் ஒருவனுக்கு ஐஸ்கிறீம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை. ஐஸ்கிறீம் பார்லர் செல்கின்றான். ஒரு நாற்காலியைப் பார்த்து அமர்ந்த அவனிடம் வருகின்ற கடை ஊழியர், 'என்ன ப்ளேவர் வேண்டும்?' எனக் கேட்கின்றார். 'வெனில்லா' என்கிறான் சிறுவன். 'இரண்டு வகைகள் உள்ளன. ஒன்றின் விலை ரூபா 45. மற்றொன்றின் விலை ரூபா 55' என்கிறார் ஊழியர். 'இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?' கேட்கின்றான் சிறுவன். 'இரண்டாம் வகை ஐஸ்கிறீமில் நிறைய முந்திரி மற்றும் பாதாம் பருப்புக்கள் சேர்க்கப்படும். அத்துடன் ஒரு சிறிய கார் பொம்மையும் இலவசமாகக் கிடைக்கும்' என்கிறார் ஊழியர். தன் பைக்குள் கையை விடுகின்ற சிறுவன் தன் பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு, 'ரூபா 45க்கு உள்ள ஐஸ்கிறீம் கொடுங்கள்' என்று ஓடர் செய்கிறான். 'இவனிடம் காசு இவ்வளவுதான் இருக்கிறதுபோல!' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே ஊழியர் ஐஸ்கிறீம் கொண்டுவருகின்றார். சாப்பிட்டுவிட்டு, 'நன்றி!' என்று சொல்லிவிட்டுச் செல்கின்றான் சிறுவன். காலிக் கோப்பையை எடுக்க வந்த ஊழியர், ரூபா 55ஐ சிறுவன் விட்டுச் சென்றிருப்பதைப் பார்க்கிறான். தனக்கு விருப்பமான ஐஸ்கிறீம் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்ட அந்த நேரத்தில், தன் ஆசையை விலக்கிவிட்டு, ஊழியரை நினைவுகூர்ந்து அவருக்காக டிப் வைத்த சிறுவனை நினைத்து ஆச்சரியப்பட்டார் ஊழியர்.

நினைவுகூரும் அனைவரும் அரசர்களே! அல்லது நினைவுகூருபவரே அரசர்!

தன்னுடைய விருப்பம் அல்லது நலனை முதன்மைப்படுத்தாமல் தேவையில் இருக்கும் பணியாளரை நினைவுகூர்ந்த அந்த இளவல் தன்னை அறியாமலேயே அந்தப் பணியாளரின் அரசர் ஆகின்றார்.

திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிற்றுக் கிழமையை இயேசு கிறிஸ்து அனைத்துலகுக்கும் அரசர் என்று கொண்டாடுகின்றோம்.

இன்றைய முதல் வாசகத்தில் (காண். 2 சாமு 5:1 – 3) வடக்கு இஸ்ரயேலுக்கு தெற்கு யூதாவுக்கும் ஏழு ஆண்டுகள் நடந்த கொடுமையான போர் முடிந்து, வடக்கு இஸ்ரயேலின் தலைவர்கள் தன்னுடைய ஊரான எபிரோனில் குடியிருந்த தாவீதிடம் செல்கின்றனர். தங்களை ஆள்வதற்கு தாவீதே சிறந்த அரசர் என்று முடிவெடுக்கின்றனர். தாவீதிடம் இருந்த பண்புநலன்களும் குணநலன்களும் ஆண்டவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட அரசர் அவர் என்று மற்றவர்களுக்குக் காட்டின. தாவீது பிலிஸ்தியர்களைக் கொன்றார் (காண். 1 சாமு 18:14 – 16). இப்படி நிறைய சாதனைகள் புரிந்தார். மேலும், ஆபிரகாம் முதன்முதலில் உரிமையாக்கிக் கொண்ட எபிரோன் பகுதியில் தாவீது இருந்ததாலும் வடக்கு இஸ்ரயேல் தலைவர்கள் அவரை நாடி வந்து தங்களை அரசாளுமாறு வேண்டுகிறார்கள்.

அவர்களோடு தாவீது உடன்படிக்கை செய்துகொள்கின்றார். உடன்படிக்கை என்பது ஒருவர் மற்றவருக்கு இடையே இருக்கும் உறவுநிலையின் வெளிப்புற அடையாளம். அந்த அடையாளத்தைக் காணும்போதெல்லாம் ஒருவர் மற்றவர் மேலுள்ள கடமைகளையும் உரிமைகளையும் நினைவுகூர்வர். எடுத்துக்காட்டாக, வெள்ளப்பெருக்கிற்குப் பின் கடவுள் நோவாவுடன் உடன்படிக்கை செய்துகொள்கின்றார். அந்த உடன்படிக்கையின் அடையாளமாக கடவுள் தன்னுடைய வில்லை (வானவில்லை) பூமிக்கு மேல் நிலைநிறுத்துகிறார். அந்த வில்லைப் பார்க்கும்போதெல்லாம் அவர் நோவாவுடன் தான் செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூர்ந்து பூமியை வெள்ளப்பெருக்கிலிருந்து காக்கின்றார்: 'என் வில்லை மேகத்தின் மேல் வைக்கிறேன். அதன் வில் தோன்றும்போது என் உடன்படிக்கையை நான் நினைவுகூர்வேன் ... உடன்படிக்கையின் அடையாளம் இதுவே' (காண். தொநூ 9:13 – 17).

ஆக, தாவீது தன்னுடைய அரசாட்சியை உடன்படிக்கை என்ற நிகழ்வின் வழியாகத் தொடங்குகிறார். இந்த உடன்படிக்கையால் இவர் தன்னுடைய மக்களை என்றென்றும் நினைவுகூர்கின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகம் (காண். கொலோ 1:12 – 20) இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதியில், பவுல் மூன்று விடயங்களுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார்: (அ) கொலோசையர்களைக் கடவுள் இமைக்களுக்கான ஒளிமயமாக உரிமைப்பேற்றில் பங்குபெற அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார், (ஆ) இதன் வழியாக அவர்கள் இருளிலிருந்து விடுவிக்கப்பட்டு அன்பார்ந்த மகனின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டனர், மற்றும் (இ) அம்மகனால் அவர்கள் பாவ மன்னிப்பு என்னும் மீட்பைப் பெறுகின்றனர்.



Almighty, everlasting God, Who in Thy beloved Son, King of the whole world, hast willed to restore all things anew; grant in Thy Mercy that all the families of nations, rent asunder by the wound of sin, may be subjected to His most gentle rule. Who with Thee lives and reigns world without end. Amen.

இரண்டாம் பகுதி, ஒரு கிறிஸ்தியல் பாடலாக அமைந்துள்ளது. கிறிஸ்துவைக் கடவுளின் சாயல் என்று வர்ணிக்கும் பாடல் ஆட்சியாளர், அதிகாரம் கொண்ட அனைவரும் அவரால்தான் படைக்கப்பட்டனர் என்றும், அவரே திருச்சபையின் தலையும் தொடக்கமும் என்று விளக்குகிறது.

கிறிஸ்து வழியாகக் கடவுள் அனைத்தையும் ஒப்புரவாக்கினார் என நிறைவு செய்கிறார் பவுல். 'ஒப்புரவு செய்தல்' என்னும் நிகழ்வில் அடுத்தவர் நினைவுகூரப்படுகின்றார். மேலும், 'ஆட்சியாளர்கள், அதிகாரம் கொண்டவர்கள் அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர்' என்று சொல்வதன் வழியாக, கிறிஸ்துவை ஆட்சியாளர்களுக்கெல்லாம் ஆட்சியாளர்கள் என்று சொல்கிறார் பவுல்.

இன்றைய நற்செய்தி வாசகம் (காண். லூக் 23:35 – 43) இயேசுவின் பாடுகள் வரலாற்றுப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி லூக்கா நற்செய்தியில் மட்டுமே காணப்படுகிறது. இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார். அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருப்பதைக் கீழே இருப்பவர்கள் பார்க்கிறார்கள். அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறவர்களும் பார்க்கிறார்கள். இவ்விருவரின் எதிர்வினைகளைப் பதிவு செய்கிறார் லூக்கா. சிலுவைக்குக் கீழே நிற்கின்ற 'ஆட்சியாளர்கள்,' 'நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்' என்று எள்ளி நகையாடுகின்றனர். இவர்கள் கொஞ்ச நேரத்திற்கு முன் பிலாத்துவின் அரண்மனையில், 'எங்களுக்கு சீசரைத் தவிர வேறு அரசர் இல்லை' என்று சொன்னார்கள். மேலும், இவர்களின் வார்த்தைகளைக் கிண்டல் செய்யும் விதமாக பிலாத்துவும், 'இவன் யூதரின் அரசன்' என எழுதுகிறான். இந்தப் பலகையைப் பார்த்தவர்கள் இயேசுவைத் தங்களுடைய அரசனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு இடறலாகப்பட்டது. தொடர்ந்து, சிலுவையில் அறையப்பட்டவர்களில் ஒருவர், 'நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று!' என்று பழித்துரைக்கிறார். ஆனால், மற்றவர் அவரைக் கடிந்துகொள்கிறார். மேலும், 'இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்' என்று சொல்லும் அவரிடம், 'இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்' என வாக்களிக்கிறார் இயேசு. தன்னுடைய பணிக்காலத்தில் மக்கள் தன்னை அரசானக்க நினைத்தபோது தப்பி ஓடிய இயேசு, 'நீ யூதர்களின் அரசனோ?' என்று பிலாத்து கேட்டபோது அமைதி காத்த இயேசு, 'நீர் என்னை நினைவிற்கொள்ளும்' என்று ஒரு கள்வன் சொன்னவுடன், தன்னுடைய அரசாட்சியை அவனிடம் ஆமோதிக்கிறார். மேலும், லூக்கா நற்செய்தியில் இயேசுவை அவருடைய பெயரைச் சொல்லி அழைத்த ஒரே நபர் இக்கள்வன் மட்டுமே.

'நினைவிற்கொள்ளுதல்' அல்லது 'நினைவுகூர்தல்' என்பது முதல் ஏற்பாட்டில் கடவுளின் உடன்படிக்கையைக் குறிக்கும் சொல்லாடல். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் துன்பம் அனுபவிப்பதை நினைவுகூர்ந்த கடவுள் கீழே இறங்கி வருகிறார் (காண். விப 2:24). இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலையில் பொன்னாலான கன்றுக்குட்டியைச் செய்து வழிபட்டபோது அவர்கள்மேல் கோபம் கொண்டு எழுந்த கடவுள், தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூர்ந்து அமைதியாகின்றார் (காண். விப 32:13).

ஆக, இன்றைய முதல் வாசகத்தில் தாவீது தான் கடவுளின் திருமுன் மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூர்ந்து அவர்களை ஆட்சி செய்கின்றார். இரண்டாம் வாசகத்தில், கிறிஸ்துவின் ஒப்புரவுப் பணி நினைவுகூரும் பணியாக இருக்கின்றது. நற்செய்தி வாசகத்தில், நல்ல கள்வனை நினைவுகூறும் அரசராக இருக்கிறார் இயேசு.

நம்முடைய குடும்பம் மற்றும் பங்குத் தளங்களில் உள்ள தலைமைத்துவத்திலும் இதே பிரச்சினைதான் காணப்படுகிறது. குடும்பத் தலைவர் அல்லது தலைவி தன்னுடைய குடும்பத்தை நினைவுகூரும்போது நல்ல தலைவராக தலைவியாக இருக்க முடியும்.

### நினைவுகூருதலுக்கு எதிர்ப்பதம் மறத்தல்

நாம் எப்போதெல்லாம் மறக்கிறோம்? தேவையில்லாதது என நினைப்பவற்றை மறக்கிறோம், கண்டுகொள்ளாத்தன்மையால் மறக்கிறோம், அல்லது நம்மை மட்டுமே அதிகமாக நினைவுகூரும்போது மற்றவர்களை மறக்கிறோம்.




'இயேசு அரசரா? யூதர்களின் அரசரா?' என்பது இன்றைய கேள்வி அல்ல. நான் அவரை அரசராக ஏற்றுக்கொள்கிறேனா? என்பதுதான் கேள்வி.

இன்றைய நாளில் நான் அந்தக் கள்வன் போல, 'என்னை நினைவுகூரும்' என்று இயேசுவிடம் சொல்லும்போது நான் அவரை என் அரசராக ஏற்றுக்கொள்ள முடியும்.

இதை எப்படி என்னால் சொல்ல முடியும்?

நான் என் நொறுங்குநிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நல்ல கள்வன் தன்னுடைய வலுவற்ற நிலையில் இயேசு மட்டுமே துணைவர முடியும் என்று நம்பினான். அவனுடைய வலுவற்ற நிலையில் அவன் இயேசுவின் வல்லமையை நாடி நின்றான்.

இன்றைய உலகில் ஒவ்வொருவரும் தன்னையே வல்லமையாகக் காட்டிக்கொள்ளவும், வல்லமை உடையவர்களோடு தங்களையே அடையாளப்படுத்திக்கொள்ளவுமே விழைகின்றனர். ஆனால், வலுவற்ற கள்வன் வலுவற்ற இயேசுவில் வல்லமையைக் கண்டான்.

அந்தச் சிறுவன்போல.

வலுவற்ற அந்தச் சிறுவன் தன் வலுவற்ற நிலையில் தேவையிலிருக்கும் அப்பணியாளரைப் பார்த்தான்.

இன்று இயேசுவை நாம் அரசராகக் கொண்டாடுகிறோம். நம்முடைய வலுவின்மையை எண்ணிப் பார்ப்போம். வலுவற்ற நிலையில் சிலுவையில் தொங்கும் அவர் நம் வலுவின்மையை அறிந்தவர்.

தன்னுடைய வலுவின்மையை அறிந்த ஒருவர்தான் திருப்பாடல் ஆசிரியர்போல, "ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்' என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன்' (122:1) என்று பாட முடியும். ஆண்டவருடைய இல்லத்தில் நுழையும் நம்மை அவர் ஆள்வார்.

அவரின் ஆளுகைக்கு நாம் உட்படும்போது அவர் நம்மை நினைவுகூர்வார். ஏனெனில், நாம் அங்கே நம்முடைய நொறுங்குநிலையை நினைவுகூர்கிறோம்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இந்தியா – நோர்வேயின் கணக்கெடுப்பு



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 186

75 ஆண்டுகளாக சமஷ்டியைத் தீர்வாகத் தமிழ் மக்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுதும் சமஷ்டியை எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாகக் கேட்க வேண்டும் என்ற முனைப்பு வந்திருக்கிறது. இடையில் தமிழீழம்தான் ஒரே தீர்வு, அதற்கு மாற்று இல்லை என்ற நிலை இருந்தது. சிங்களத்தின் விதவித ஆளுமையும் இல்லாமல் இருப்பதனால் அதுதான் ஒரே வழி.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை கூறியவாறு விவாகரத்து ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு விமோசனம் தரும். இதனை சிங்களம் ஏற்றுக்கொண்டு மணபந்தத்தை முடித்துக் கொள்ள வேண்டும். அன்றில் சர்வதேச கோடு கச்சேரிகளில் ஏறி அவர்கள் மூலம் நியாயங்களின் அடிப்படையில் தீர்க்க வேண்டும். ஒத்து வாழ்வது இனி சரிப்பட்டு வராது என, பந்தத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும். பிரிவதற்கு தங்களது பேராண்மையில் அவர்களிடம் இருக்கும் ஆளணி அடுக்குகளில் தென்னிலங்கை விடப் போவதில்லை. இதுவரையிலும் இந்த 75 வருடங்களின் பின்னும், காலிமுகத்திடல் போராட்டம் வந்து, பேராண்மையை உலுக்கிய போதும் ஒற்றை ஆட்சி என்பதிலிருந்து வேறாக சிங்கள தலைமைகள் சிந்திக்க தயாராகவில்லை. அப்படி இருந்தும், இன்னும் 'மயிலே! மயிலே! ஒரு இறகு தருவாயா?' எனக் கேட்டு, அதனை சிங்கள மக்கள் தருவார்கள் என எதிர்பார்ப்பது எவ்வளவு மடமைத்தனம்? மயிலிடமிருந்து இறகுகளைப் பிடுங்குவதற்கும் எத்தனங்கள் நடந்து, அதுவும் முடியவில்லை. அதற்கிடையில், இந்தியாவின் ஒப்பந்தத்தில் வந்த 13ஆவது திருத்தத்தையும் உதறித் தள்ளி, பின் சந்திரிகாவின் பிராந்திய ஒன்றியத் தீர்வையும் ஏற்காமல், நோர்வே ஈடுபட்ட பேச்சும், சிங்கள தரப்புகளின் இந்த மனோபாவத்திலிருந்து அவர்கள் விடுபடாத வரை அவர்கள் பேசும் பேச்சுக்கள் எல்லாம் யதார்த்தமான பெரிய கரும்பலகைகள் அமைக்கலாம், அவற்றில் நாட்டின் சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் எத்தனையோ படங்கள் போடலாம் என்பதாக இருக்கும், ஆனால் கரும்பலகையில் எழுதும் வெண் கட்டி அவர்கள் கையில் இருந்து, அவர்கள் தான் எவை எழுதப்பட வேண்டும் என தீர்மானிப்பதாக அமையும். ஆக, கரும்பலகை – வெண்கட்டி கதை தான்.

ஆகவே அந்த அதிகாரங்கள் தரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான உத்தரவாதங்கள் என்ன என்பதும் முக்கியமாகின்றது.


அப்படி நடைமுறைப்படுத்தாது விட்டால், ஏமாற்றிவிட்டார்கள் என்ற பரவணிப்





பாட்டைத் தூக்கி கோங்கள் போடுவதா? ஆகவேதான் வரக்கூடிய இணக்கங்களை அமல்படுத்த, அவற்றை உத்தரவாதப்படுத்தி நடைமுறைகளுக்கு கொண்டுவர, சர்வதேச ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என நோர்வே சமாதான பேச்சாளர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள்.

இருதரப்பினரும் தங்களது அடிமட்ட நிலைகளில் இருந்து விட்டுக் கொடுக்காத தன்மையிலும், அவர்களது மனோபாவங்களில் இருந்து நோர்வேயின் வெளியுறவு தரப்புகள் இவற்றைக் கணித்துக் கொண்டன. நோர்வே சர்வதேசத்தில் பலம் பொருந்திய அரசு அல்ல, அதனிடம் இணக்கங்களை அமுல்படுத்துவதற்கான இராணுவ கட்டமைப்புகள் இல்லை. அது சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட முடியுமே அல்லாமல், இரண்டு பகுதியினரும் இணங்கிக் கொண்டாலும், தங்கள் ராணுவத்தின் மூலம் அவற்றை அமல்படுத்தச் செய்ய இராணுவ வளங்கள் பெற்றவர்களும் அல்லர். அதற்கான ஆதரவுக்காக நோர்வே இந்தியா



வைத்தான் பிராந்தியத்தின் வல்லமையில் இருந்த நாடாக அனுசரணைகளுக்கு அணுகியது.

சமாதானப் பேச்சுக்கள் சுழியோட்டங்களால் தோல்வியுற, பழையபடி சமஷ்டியைப் பற்றிப் பேசுவோம் என்று ஒன்றுகூடல் அழைப்புகள் மிதக்கின்றன. இவ்வளவு காலங்களும் பேசியாயிற்று. இன்னும் சில வருடங்கள் பேசினால் என்ன என தமிழ் மக்கள் விரக்தியில் முனகுவார்கள். அவ்வளவுதான்.

அதிகாரப் பரவல் என்றோ, சமஷ்டி என்றோ சமஷ்டி எனப் பெயரளவில் அழைக்கப்பட்டாமல், சமஷ்டி அதிகாரங்களைக் கொண்ட எந்த அரசமைப்பையும் ஆக்கிக் கொள்ள சிங்கள தரப்புகள் முன்வரலாம். அது இணக்கத்தின் அடிப்படையில் ஆகலாம், அன்றில் சர்வதேச அழுத்தங்களின் காரணங்களால் இருக்கலாம்.

ஆனால் அவற்றில் எதையாவது நிர்வாக ரீதியாக நடைமுறைப்படுத்துவார்களா என்பதுதான் முக்கியமான கேள்வி. அப்படி நடைமுறைப்படுத்தாவிட்டால், இணக்கத்தின் பெயரில் அமைந்தால், பழையபடி அது சிங்கள தலைவர்களின் கையில் இருக்கும். அல்லது ஒவ்வொரு சமயமும் அதனை அமல்படுத்திக் கொள்ள ஸ்ரீலங்காவின் பெயர் போன நீதித்துறையை நாட வேண்டியிருக்கும்.

அது பற்றிய அனுபவங்களுக்கு வெகு தூரம் போக வேண்டியது இல்லை. 13 ஆம் அரசமைப்புத் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட அதிகார பரவல்களே உதாரணம். இதை இந்த 35 ஆண்டுகளும் பறை சாற்றுகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்தாதமைக்கு, தமிழ் மக்களும் காரணமாகலாம். ஆனால் சிங்கள தரப்புக்கள் அவற்றை எப்படி முறியடிப்பது என்பதிலேயே குறியாய் இருக்கின்றன. பேராண்மையினதும், பேரினவாதத்தின் ஆளுமைகளிலிருந்தும் விடுபட்டு, அன்றில் அதனை மீறி, அவற்றைச் செயற்படுத்த இன்று வரை எந்தத் சிங்கள தலைவரும் முன் வந்ததில்லை.

13 ஆம் திருத்தம் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களை இணைத்து, தமிழ் பிரதேசமாக்குகிறது. காணி, நிதி, பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருந்து பறிபோகின்றன என்ற கூக்குரல்கள் எழுந்து, அவை பிரதேசங்களுக்கான ஆளுமைகளை உள்ளடக்கியமையால், அரசாங்கம் அமல்படுத்தத் தயங்கியது என தார்மீகக் கணக்கில் வாதங்களைப் பார்த்தாலும், மனிதாபிமானத்திற்காவது பௌத்தரின் காரணியம் கடைப்பிடிக்கப்பட்டதா என்பதை சுனாமி நிதி பராமரிப்பின் இடைக்கால கட்டமைப்புக்கு நடந்ததிலிருந்து பார்க்கலாம்.

நோவேயின் சமாதான பேச்சுவார்த்தை காலங்களில் சுனாமிக்கு சர்வதேசங்களில் இருந்து பெறப்பட்ட நிதிகளைத் தமிழ் பகுதிகளில் எவ்வாறு கையாள்வது என்பது அப்பொழுது இருந்த ஜனாதிபதி சந்திரிகாவினாலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவை இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பேரவலம், அவற்றின் மீட்புப் பணிகளுக்குக் கூட அதிகாரம் பகிரப்படக் கூடாது என விகாரைகள், கோவில்கள், மசூதிகள், சர்ச்சுகள் எல்லாம் ஏறி வலம் வரும் மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர பௌத்த சகபாடிகள் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு நாட்டின் அரசமைப்புச் சட்டத்துக்கு முற்றிலும் மாறானது என நீதிமன்றத்திற்கு சென்றார்கள்.

சந்திரிகாவின் காலத்திலிருந்து அதனைப் பார்வையிட்ட – கையாண்ட – நீதிபதிகள் குழாம் இந்தக் கட்டமைப்பு மனித பேரவளத்தில் மனிதாபிமானத்தை முன்னெடுக்கிறது என சிலாகித்து, யாவரும் அந்த நிர்வாக அதிகார பரவல் அரசமைப்புச் சட்டத்துக்கு அமைவானது என ஏற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்த்தாலும், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்வானதும் அந்தக் கட்டமைப்பு நாட்டின் அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என தீர்ப்பு வழங்கியது.

இவற்றில் இருந்து தெரிந்து கொள்வது என்ன? சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களது மட்டுமல்ல, எந்தச் சிறுபான்மை இனத்தவரின் கைகளிலும் எது விட நடைமுறை அதிகாரங்களையும் சுயாதீனமாக தங்கள் பிரதேசங்களில் நடத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை, தீவு முழுவதும் அதனை அவர்கள்தான் நடத்துவார்கள் என்பதுதான். கடந்த காலங்களில் திரை மறைவுகளில் இவை நடத்தப்பட்டன. பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தாம் இந்த முயற்சிகளில் ஈடுபட எண்ணுகிறேன் என இந்தியாவுடன் இருந்த ராஜதந்திர பேச்சுக்களில் தெரிவித்து, ஆதரவு கோரினார். சமாதானம் என்று ஒன்று வந்தால் அதனை வரவேற்கலாம் என்பதுதான் இந்திய நிலைப்பாடாக இருந்தது.

இரு பகுதியிலும் இருந்தும் சமாதான பேச்சுக்கு அழைப்பு வந்து எரிக் சொல்ஹெய்மும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரும், ஸ்ரீ லங்கா வந்தபோது, அவர்கள் ஏற்படுத்திய அடுத்த பிரயாணம் புதுடில்லி சென்று, பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளியுறவு, பாதுகாப்பு காரியதரிசிகளையும் சந்தித்து, ஆசிகளும் அனுசரணையும் கோரியது. இந்தியத் தரப்புகள், பிராந்தியத்தில் இது மிகவும் சிக்கலானது, உங்களுக்கு – அதாவது நோர்வேக்கு – நீண்ட பொறுமை உண்டானால் முயற்சிகள் செய்யுங்கள் என்பதோடு விட்டுவிட்டது.

அடுத்து பேச்சுவார்த்தைகளுக்காக எழுந்த ஆதங்கம் அதனை எங்கே நடத்துவது என்பதுதான். மதியுரைஞர் பாலசிங்கம் தனது சுகவீனம் கருதி, நீண்ட தூரப் பயணங்கள் மேற்கொள்ள விரும்பாதமையால், அதனைத் தமிழ்நாட்டில் நடத்த விரும்பினார். தனக்கு சமாதான பேச்சுக்கள் சம்பந்தமாக பிரபாகரனோடும் விடுதலை புலிகளுடனும் இடையில் கலந்துரையாட வேண்டியதால் சென்னையில் இருந்து வன்னிக்கு செல்வது கடினமாகாது என்பதாலும் தமிழ்நாடு சௌகரியமாக இருக்கும் என்ற வாதங்களையும் அவர் தர, இவற்றைப் பரிசீலனைக்காக எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லி மட்டத்திற்கு எடுத்துச் சென்றார். இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டிருந்தனர். மதியுரைஞரும் இந்தியாவுக்கு விசா பெற்றுப் பயணங்கள் மேற்கொள்ள முடியாதவராக இருந்தார். இந்தியா என்ன செய்தது? நாளை பார்ப்போம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோத காலபோக நெற்செய்கையால் கிளிநொச்சியில் அமைதியின்மை நிலைமை!

கிளிநொச்சி இரணைமடுகுளத்தின் கீழான ஒதுக்கீடு பிரதேசங்களில், சட்ட விரோதமாக காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டினால், அங்கு அமைதி யின்மை நிலவியது.

வியாழக்கிழமை சட்டவிரோதமாக கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதை, அழிப்பதற்காக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் பொலிஸாருடன் சென்ற வேளை, அவர்களுக்கும் சட்ட விரோதச் செய்கையாளர்களுக்கு மிடை யில் முரண்பாடு ஏற்பட்டது.

ஆரம்பத்தில் பயிர்செய்கை நடவ டிக்கை மேற்கொள்ளும்போது அதிகாரிக ளால் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில், பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட இந்த நடவ டிக்கை பயிர் செய்கையாளர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, குறித்த பிரதேசத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதால் ஏற்ப டுகின்ற பாதிப்புகள் தொடர்பில் தொழில் நுட்ப ரீதியான அறிக்கைகள் எவையும் மாவட்ட உயர்நிலை அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அறிய முடிகின்றது.

இது ஒருபுறமிருக்க கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவின் கீழுள்ள கல்மடுக்குளத்தின் கீழ் அரச அதி காரிகள் உள்ளடங்கிய சிலர், சட்ட விரோ தமாக மேற்கொண்ட பயிர் செய்கை ளுக்கு குளத்து நீர் திறந்து வழங்கியது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை



தொடர்பிலும் அதிகாரிகள் மௌனம்காத்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

## மன்னார் வைத்தியசாலைக்கு மடிக்கணினி தூய்மையாக்கல் திரவங்கள் அன்பளிப்பு!

மன்னார் பொது வைத்தியசாலைக்கு மடிக்கணினி மற்றும் தூய்மையாக்கல் திரவங்கள், அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு தெற்கு றோட்டறி கழக அங்கத்தவர்கள் மற்றும் மன்னார் றோட் டறி கழக அங்கத்தவர்களால் இந்த அன் பளிப்பு, வைத்தியசாலை நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டது.

கொழும்பு தெற்கு றோட்டறி கழகத்தின் பிரதான நிதி அன்ப ளிப்புடன், தொற்றுநீக்கி திரவம் 5 பெட்டிகள் வழங்கி வைக்கப் பட்டன.

மேலும், மன்னார் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவின் செயற்பாட்டை மேம் படுத்தும் பொருட்டும் மற்றும் தகவல் சேகரித்தல் செயல்பாடு, இலத்திரனியல் முறையில் தகவல் பரி மாற்ற சேவையை இலகுபடுத்தும் நோக்கிலும் மன்னார் பொது வைத்திய சாலை முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக மடிக்கணினி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டது.




## இலங்கை நாடாளுமன்றில் முதன்முறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் ஆயிரத்து 283 நிறுவனங்கள் அரசாங்கத்தின் கீழ் உள்ளன என அறிவிப்பு

இலங்கை நாடாளுமன்றத்தில் முதன் முறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத் தில் அரசுக்கு சொந்தமான 420 நிறுவனங் கள் உட்பட ஆயிரத்து 283 நிறுவனங் கள் அரசாங்கத்தின் கீழ் உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 29 அமைச்சகங்களும் 99 துறைகளும் அடங்கும் எனத் தெரிவிக் கப்படுகிறது. அனைத்து அரச நிறுவனங் களையும் பட்டியலிடும் ஆவணமொன்றை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய, நாடாளுமன்றத்தில் சமர்ப் பித்துள்ளார். இலங்கை வரலாற்றில் இவ்வாறான தொரு ஆவணம் நாட்டுக்கு தெரியப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். நிதி, பொருளாதார ஸ்திரப்ப டுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தனது சமீபத்திய வரவு – செலவுத் திட்ட உரையின் போது வழங்கிய வாக்குறு தியின் பிரகாரம் இந்த ஆவணம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடையாளம் தெரியாத ஆண், பெண் சடலங்கள்; மக்களின் உதவியை நாடும் யாழ். ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில், அடையாளம் தெரியாத ஆண் மற்றும் பெண் ஆகியோரின் சடலங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதுவரை இவ்விரு சடலங்களும் அடை யாளம் காணப்படாத நிலையில், இவற்றை அடையாளம் காண உதவுமாறு யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை அதிகா ரிகள் பொதுமக்களின் உதவியைக் கோரி யுள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட திருவடி நிலை கடற்கரையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி கரை யொதுங்கிய ஆணொருவரின் சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்ப டைக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அதேபோல, யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாழ். மத்திய பஸ் நிலை யத்தில் இருந்து கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டு, பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்ட நிலையில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

மேற்படி இரு சடலங்களையும் அடை யாளம் காண உதவுமாறு யாழ். போதனா வைத்திய சாலை தரப்பினர் உதவி கோரி யுள்ளனர்.

## சிறுவர்களிடையே பரவும் வைரஸ் காய்ச்சல் வலிப்பு ஏற்படுகின்ற அபாயமும் அதிகரிப்பு!

ஊவா மாகாணத்தில் வைத்திய சாலைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சங் கத்தின் உதவிச் செயலாளரும் பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரியுமான பாலித ராஜபக்ஷ இத னைத் தெரிவித்தார்.

சிறார்கள் மத்தியில் தற்போது பரவி வரும் வைரஸ் காய்ச்சலால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலைமையால் சிறுவர்களுக்கு காய்ச்சலால் வலிப்பு ஏற்படும் அபாயமும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மலையக மக்கள் பிரச்சினைகள் ஐ.நா. பேரவையின் அறிக்கையில்!

### உள்வாங்கப்படுமென்கிறார் இராதாகிருஷ்ணன்



மலையக மக்களின் பிரச்சினை கள் அடுத்த வருடம் ஐக்கிய நாடுகள் பேர வையின் அறிக்கையில் உள்வாங்கப்பட வுள்ளன என மலையக மக்கள் முன்ன ணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவ ரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகை யில் –

'இந்த மலையக மக்கள் மிகவும் பின் தள்ளப்பட்ட மக்கள். இவர்கள் தொடர்பிலும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என ஐ.நா பிரதிநிதிகளிடம் தெரிவித்துள் ளோம்.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேசத் துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த தினங்களில் ஐ.நா. பிரதிநிதிகளை நானும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணே சனும், நாடாளுமன்ற உறுப்பினர் உதயகு மாரும் சந்தித்து கலந்துரையாடிய போது, இந்த மலையக மக்கள் நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டோம்.

வடக்கு, கிழக்குக்கு அப்பால் வாழ் கின்ற மலையக மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினைகள் அதிகமாகவே காணப் படுகின்றன. எனவே இவர்களையும் கருத்திற் கொண்டு இவர்களின் பிரச்சி னைகளை கேட்டறிந்து தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர்களிடம் வலியுறுத்தினோம்.

இதற்கு பதிலளித்த அவர்கள் எதிர்வ ரும் ஆண்டு ஐக்கிய நாடுகள் பேரவை யின் அறிக்கையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உள்வாங் கப்படவுள்ளதாக உறுதியளித்தனர்' எனக் கூறினார்.

## 2023 ஆண்டு வரவு – செலவுத் திட்டம் குறித்து கடற்றொழில் ஒத்துழைப்பு இயக்கம் அதிருப்தி!

இந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத் தில் மீனவர்களின் ஏழ்மையான வாழ்க்கை யைக் கட்டியெழுப்புவதற்கான எந்த வேலைத்திட்டமும் முன்வைக்கப்பட வில் லை என கடற்றொழில் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய ஒன்று கூட்டுனர் ஹர்மன் குமார அதிருப்தி வெளியிட்டுள் ளார்.

திருகோணமலையில் தேசிய கடற் றொழில் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற் பாட்டில் இடம்பெற்ற மீன்பிடி கலாசார விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே ஹர்மன் குமார இவ்வாறு தெரிவித்தார். இதன்போது, அவர் மேலும் கூறுகையில் –

'2022 ஆம் ஆண்டை சிறுபான்மை மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்பு ஆண் டாக ஐக்கிய நாடுகள் சபை நியமித்துள்ள போதிலும், இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் மீனவர்களுக்கு பயன் தரும் வகையிலான எந்தவித திட்ட முன்மொழி வுகளும் இடம்பெறவில்லை.

கடல், ஏரி மற்றும் குளங்களை வெளி நாட்டவர்கள் ஆக்கிரமிக்க ஆரம்பித் துள்ளனர். குறிப்பாக திருகோணமலை மாவட்டம் அபிவிருத்தி என்ற போர்வை யில் ஆக்கிரமிக்கப்படுகிறது. கடல் வளங் களை பிற நாட்டவருக்கு வழங்குவதன் ஊடாக மேற்படி பகுதிகளில் மீன் பிடியில் ஈடுபடுவது தடைப்படுவதால் பல மீனவர் கள் தொழிலை இழக்கும் நிலைக்கு தள் ளப்பட்டுள்ளனர். – எனக் கூறினார்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளாந்தம் அதிகரிக்கின்றதாம்!

இலங்கைக்கு நாளாந்தம் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1800 ஆக அதிகரித்துள்ளதாக சுற்று லாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாதம் கடந்துள்ள காலப்பகுதியை கருத்திற்கொண்டு சுற்றுலாப் பயணிக ளின் தினசரி வருகை பதிவு செய்யப்பட்டுள் ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சராசரியாக, தினசரி சுமார் 2 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின் றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதத்தில் இதுவரை 27 ஆயி ரத்து 213 சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வந்துள்ளனர் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் ரஷ்ய பிரஜைகள் என வும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## தீர்வுக்கு உறுதுணையாக ..

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நேரத்தில் வடக்கு மாகாணம் கால் தடம் போட்டு விழ வைத்தது. தற்போது விழ வைத்தவர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். மிக முக்கியமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தற்போது அமைச்சரவையில் இருக்கிறார். அவர்களுடைய ஆதரவையும் கொண்டு ஜனாதிபதியாக இருக்கும் நிலையில் இந்த நீண்டகால பிரச்சினைக்கு ஓர் ஆக்கபூர்வ முடிவை எடுப்பார் எனச் சொல்லியிருக்கிறார். அதனை தீர்ப்பதற்கும் நாம் உறுதுணையாக இருந்து செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

## வடக்கு காணிப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றதுடன், அந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

மாகாணத்தில் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகள் தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக வடக்கு மாகாணத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

வடக்கில் இதுவரையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

செட்டிகுளம் பகுதியில் 1994 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படாமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இங்கு ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

செட்டிகுளம் பிரதேசத்தின் காணிப் பிரச்சினை தொடர்பில் மத்தியஸ்தம் செய்து 3 மாதங்களுக்குள் தீர்வு காணுமாறு வவுனியா மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இது தொடர்பில் நீதி அமைச்சு மற்றும் காணி அமைச்சிடம் விசாரணை செய்வதாகவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில விவசாய நிலங்கள் தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண மக்களின் வீட்டுப் பிரச்சினை தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், வடக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளன என்றும், அதற்கு மேலும் சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடளாவிய ரீதியில் தற்போது பல வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், வடக்கு மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா குளம் மற்றும் திருக்குளம் குளத்தை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் தேவைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இதன்போது ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைத்தல், உரப் பிரச்சினைக்கு தீர்வு காணல் மற்றும் விநியோக நடவடிக்கைகளை சீர்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் வைத்தியர் பற்றாக்குறை குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தேவையான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் விளக்கமளித்ததுடன், அது தொடர்பில் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நகர அபிவிருத்தி வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வன ஆக்கிரமிப்புத்தான் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நேரடியாகச் சுட்டிக் காட்டியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் தொடர்பாக ஆராயப்பட்ட இக் கூட்டத்தில் 2009 ஆம் ஆண்டுவரையில் முல்லைத்தீவு மாவட்ட மொத்த நிலப்பரப்பின் 36.7 வீதமே காடு என்றே சகல பதிவுகள், தரவுகளும் உள்ளன. இருந்தபோதும் 2010 ஆம் ஆண்டு அது திடீரென 68 வீதமாக அதிகரிக்கப்பட்டது.

அதாவது 2009ஆம் ஆண்டின் பின்பு அங்கே போர் இடம்பெற்ற காலத்தில் எதன் அடிப்படையில் 68 வீதமாக அதிகரிக்கப்பட்டது என ஆராய்ந்தால், வன வளத் திணைக்களத்தின் கொழும்பு அதிகாரிகள் கொழும்பில் இருந்தவாறு கூகுளில் வரைபடங்களை பார்த்து அதன் அடிப்படையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளனர்.

இதன் பின்பு தற்போது மேலும் 7 வீதம் காடாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடவுள்ளனர். அப்படியானால் மாவட்டத்தின் 75 வீதம் இதிலேயே பறிபோகின்றது எதிர்காலத்தில் மேலும் காடு என உரிமை கோர மாட்டார்கள் என்பதற்கும் உத்தரவாதம் கிடையாது. அவ்வாறானால் மாவட்டத்தின் நிலை என்ன? என நேற்றைய கூட்டத்தில் வினாவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அமைக்கப்படும் குழுக்களில் இதனை விசேடமாக ஆராயும் தெரிவித்தார்.

## கூரைக் கொங்கிறீட் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தார்.

தொல்புரம், சுழிபுரத்தைச் சேர்ந்த 27 வயதையுடைய தவபாலன் சயந்தன் என்னும் இளைஞனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இயக்கச்சி சந்திக்கு அருகில் ஏ9 வீதியில் இருந்து 25 மீற்றர் தொலைவில் உள்ள அம்மன் ஆலய புனரமைப்பு பணிகள் இடம்பெறுகின்றன. இதன்போது ஆலயம் கொங்கிறீட் இடும் பணிகள் மேற்கொண்ட சமயம் அதற்கான குத்துக்கால்கள் உடைந்து வீழ்ந்தமையினால் பணியில் ஈடுபட்ட இரு தொழிலாளர்கள் அதனுள் அகப்பட்டனர்.?அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.







இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட டெனிஸ் டென்ஸ் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றிய யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான பாராட்டு விழா கடந்த வாரம் பாடசாலையில் நடைபெற்றது.

ரிட்ஸ்பறி நிறுவனத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இந்த டென்னிஸ் சுற்றுப் போட்டியில் சிறுமிகளுக்கான சிவப்புப் பந்துப் பிரிவில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# நீர்வளப் பாதுகாப்பு ஆய்வரங்கு வடக்கு மாகாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.20

எஹெட் (AHEAD - Accelerating Higher Education Expansion and Development) செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்து பீடத்தால் முன்னெடுக்கப்படும் 'வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு – Water Security in Northern Province (WASPAR)' என்ற செயற்றிட்டத்தின் நடுவழி ஆய்வரங்கும், 'வடக்கின் நீருக்கான உரையாடல் மன்றம் – NORTHERN WATER DIALOGUE FORUM ' என்ற கருத்துரைப்பு அரங்கும் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்து பீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் நடுவழி அறிக்கையிடலாக இடம்பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் வடமாகாணத்தின் நல்லூர், கோப்பாய் மற்றும் அக்கராயன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 13 ஆய்வு முன்வைப்புகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.


எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நீர் வள முகாமைத்துவத்துடன் செயற்படுகின்ற அரச நிறுவனங்கள் மற்றும் ஆய்வின் செயற்படு குழுக்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட ஆய்வுத் தரவின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்கள் – ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் நிலைமைகள் பற்றி ஆய்வரங்கில் முன்வைக்கப்படவுள்ளதுடன், பங்கெடுப்பு ஆய்வின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் நீர் வளத்துடன் தொடர்புபட்ட அதிகாரம் மிக்க தரப்புகளுடனான கலந்துரையாடல்கள், திறவுரைகளும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் நவம்பர் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, நீர் வள முகாமைத்துவத்துடன் செயற்படுகின்ற அரச நிறுவனங்கள், ஆய்வு நடவடிக்கைக்கு தன்னார்வத்துடன் ஒத்துழைப்பு வழங்கும் குழுக்கள் – பொது மக்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு இடையிலான 'வடக்கின் நீருக்கான உரையாடல் மன்றம்' என்ற கருத்துரைப்பு அரங்கும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வு பற்றி 'வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு – Water Security in Northern Province (WASPAR)' செயற்றிட்ட ஆலோசகரும், சுவீடன் விவசாய விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழலியல் தொடர்பாடலில் வாழ்நாள் பேராசிரியருமான, பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா ஆய்வுரை நிகழ்த்துவார்.

## 14 லட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம் யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் மீட்கப்பட்டன!

யாழ். இளவாலை பகுதியில் உள்ள வீடுகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இந்த நிலையில் அவரிடமிருந்து 14 லட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை மூன்று வீடுகளை உடைத்து திருடிய நிலையில் கைது செய்யப்பட்டார்.

இதற்கமைய நேற்று (சனிக்கிழமை) மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மனித கடத்தலில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேகநபருக்கு மறியல்!

ஓமான் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளுக்கு மனித கடத்தலில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேகநபர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.நேற்று (சனிக்கிழமை) சந்தேகநபர் நீர்க்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சந்கேதநபர் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பங்கேற்பு!

வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.



வவுனியா கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டார்.

இதனை அடுத்து ஜனாதிபதியின் இணைப்பு செயலக திறப்பு விழாவில் எம். ஏ சுமந்திரனும் செல்வம் அடைக்கலநாதனுடன் கலந்து கொண்டிருந்தமையுடன் சி.வி.கே. சிவஞானமும் கலந்து கொண்டார்.

## தேர்தலை ஒத்திவைக்க அரசு நாடகமாடுகின்றது!

### பீரிஸ் குற்றச்சாட்டு

தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இன்று சனிக்கிழமை நாடாமன்றத்தில் தெரிவித்தார்.



உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தற்போது அதிகமாக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தற்போதைய பிரதமர் கடந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த போது அந்த பதவிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததாக சுட்டிக் காட்டினார்.

இதேவேளை தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு மீண்டும் சீனாவால் அரிசிப் பொதிகள் நன்கொடை!

இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட மற்றுமொரு அரிசி பொதிகள் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) 1,000 மெற்றிக் தொன் பொதிகள் கொண்ட அரிசி தொகை கொழும்பு துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ளது.

மேலும் இந்த அரிசி பொதிகள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரை 7 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசிபொதிகள் சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் பசறை கும்பாபிஷேகத்தில்!

நீண்ட கால இடைவேளைக்கு பிறகு மலையக மண்ணில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) உலக புகழ் பெற்ற தெய்வீக நாதஸ்வர இசை சக்கரவர்த்தி, அகில உலக சித்தர்களின் குரலின் சமஸ்தானத்தின் ஆஸ்தான வித்வான், கலைமாமணி, டாக்டர் ஈழநல்லூர் பாலமுருகனின் நாதஸ்வர தவில் இசை கச்சேரி நடைபெற உள்ளது.



சித்தர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நூற்றாண்டுகள் பழைமையான பதுளை, பசறை கோனாகலை, ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று (ஞாயிற்றுக் கிழமை) இந்த இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

உலக புகழ் பெற்ற தெய்வீக நாதஸ்வர இசை சக்கரவர்த்தி, அகில உலக சித்தர்களின் குரலின் சமஸ்தானத்தின் ஆஸ்தான வித்வான், கலைமாமணி, டாக்டர் ஈழநல்லூர் பாலமுருகன் மாபெரும் அதி அற்புத ராகங்களை இசைக்க இலங்கையின் தலைசிறந்த நாதஸ்வர தவில் வித்வான்களை கொண்ட தன் குழுவினருடன் நீண்ட கால இடைவேளைக்கு பிறகு மலை யக மண்ணுக்கு வருகை தருகிறார்..

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி முன்னிலையில் இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான நளபாகச் சக்கரவர்த்தி மதி அண்ணரின் அறுசுவை அன்னதானமும் இரண்டாயிரம் பேருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கணபதி ஹோமத்துடன் அனைத்து கிரிகைகளும் ஆரம்பமாயிருக்கின்றன.

'இந்தக் கும்பாபிஷேகம் அந்த ஊர் மக்களின் 40 வருட கனவு' என அந்த ஆலயத்தின் தலைவர் எஸ். சிம்மேந்திரன் குழுவினர் கண்ணீர் மல்கக் கூறினர்.



இரவு பகலாக இந்த மாபெரும் கும்பாபிஷேகத்தை தமது செலவில் நெறிப்படுத்தி ஒழுங்கமைத்த சித்தர்களின் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி. தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன், சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள், டிரோன் போடியார், வீரமுனை சனுஷ்காந்த் ஆகியோருக்கு ஆலய பரிபாலன சபையினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2022இல் வெளியிடப்பெற்றது.